SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 5, Pages:56
December-2021, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்
டிசம்பர் 2021
விலை ரூ.5/-



## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்

30-11-2021 முதல்
08-12-2021 வரை


திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதி தாயார்
புஷ்பயாகம்
09-12-2021



கா$_4$ண்டீ$_3$வம் ஸ்ரம்ஸதே
ஹஸ்தாத்
த்வக்சைவ பரித$_3$ஹ்யதே |
ந ச சக்நோம்யவஸ்த$_2$ாதும்
ப்$_4$ரமதீவ ச மே மந: ||

கையிலிருந்து காண்டீவ வில் நழுவிக் கொண்டிருக்கிறது. மேலும், சருமத்திலும் மிகவும் எரிச்சல் உண்டாகிறது. என்னுடைய மனதும் குழப்பமடைவதுபோல் உள்ளது. ஆகவே, நான் நிற்பதற்கும்கூட இயலாதவனாக இருக்கிறேன்.

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–30

சந்த்ராம் ப்ரபாஸாம் யசஸா ஜ்வலந்தீ
ச்ரியம் லோகே தேவஜுஷ்டாமுதாராம்|
தாம் பத்மநேமிம் சரணமஹம் ப்ரபத்யே
அலக்ஷ்மீர் மேநச்யதாம் த்வாம் வ்ருணே||

சந்திரனை அம்சமாக உடையவளும், மிகச் சிறந்த ஒளிகளை உடையவளும், புகழுடையவளும், ஆறு விதமான அக்னியாய் இருப்பவளும், தேவனான ஹரியோடு சேர்ந்திருப்பவளும், எல்லாம் கொடுத்தும் ஒன்றும் கொடுத்திலோம் என்னும் வண்மைக் குணத்திற்கு விளை நிலமாயிருப்பவளும், ஐந்து காரியங்களைச் செய்பவளும், காலத்திற்கு வெளிப்பட்டவளுமான ஸ்ரீதேவியை நான் சரணமடைகிறேன். என்னுடைய தாரித்திரியம் நசிக்கட்டும்; அதற்காக உன்னை உபாயமாக வரிக்கிறேன்.

- ஸ்ரீஸூக்தம் -5





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி. தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

## டிசம்பர் 2021

மலர் 01

இதழ் 05



*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
*ஆசிரியர் :*
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
*அச்சிடுபவர் :*
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு **sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


**பஞ்சமி தீர்த்தம்** 7
*- கீர்த்தி மூர்த்தி உ.வே.தி.அ. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி, திருப்பதி.*
**"ஸ்ரீ" யை போற்றுவோம்** 12
*- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.*
**அன்னமய்யா போற்றும் தாயார்** 17
*- திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்.*
**ஸ்ரீநிவாசன்-பத்மாவதி கல்யாணம்** 21
*- இதிகாசமயம் வீ.சீதாராமன், சென்னை.*
**திவ்ய பிரபந்தத்தில் திருமகள்** 24
*- திரு. ஆர். கண்ணன், பெங்களூரு.*
**கோ மஹா சம்மேளனம்** *- திரு. வ.ஓ. சரேஷ், சத்திரவாடா.* 31
**திருப்பாவையில் திருநாம சிறப்புகள்** 36
*- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*
**அஷ்டலக்ஷ்மி திருக்கோயில்** 40
*- நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம்.*
**இதிகாசங்கள் காட்டும் பிராட்டியின் சீர்மை** 44
*- திரு. எஸ்.துரை, காஞ்சிபுரம்.*
**புராண இலக்கியங்களில் ஸ்ரீமகாலக்ஷ்மி** 48
*-பிரேமா நந்தகுமார், ஸ்ரீரங்கம்.*
**சித்திரக்கதை : பாவை நோன்பு** 52


### வாசகர்களுக்கு...

*இவ்விதழ் தாயார் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*-பிரதான ஆசிரியர்*

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : *யானை வாகனத்தில் ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.*

பின்னட்டை : *ஸ்ரீஆண்டாள்.*

# பிராட்டிக்கு பிரம்மோத்ஸவம்



அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகன், ஏழுமலை வாசன், வேங்கடரமணன், திருமலை வாசன், ஸ்ரீநிவாசன், ஆபத்பாந்தவன் என பல பெயர்களால் பக்தர்களால் போற்றப்படும் திருவேங்கடமுடையானின் இதயத்தில் கொலு வீற்றிருப்பவள் மஹாலக்ஷ்மி தாயார். மஹாலக்ஷ்மி என்றாலே மங்களம். தான்யம் செல்வத்திற்கு மட்டும் அதிபதியன்றி அறம், பொருள், இன்பம், வீடு என அனைத்தும் இவளின் இன்னருள் ஒன்றினாலேயே நாம் அடைகின்றோம் என்கிறது இவளது மகிமை மிக்க திருநாமம். இவளோ வேறி மாறாத பூ மேல் விளங்கும் அலர்மேல் மங்கை.

திருவேங்கடமுடையானின் பட்டத்து ராணியான பத்மாவதி தாயார் உயர்ந்ததும், ஆனந்தமானதுமான ஐச்வர்யங்களையும், சௌபாக்கியங்களையும் அருளி, திருவேங்கடவனில் நீக்கமற உறைந்துள்ளாள். மேலும், தர்ம, அர்த்த, காம, மோட்சம் எனும் நான்கு புருஷார்த்தங்களையும் அவரவர் பலாபலன்களுக்கு ஏற்றாற்போல் வழங்குகின்றாள். அத்தகையவள் எம்பெருமானின் திருமார்பினில் அமர்ந்துறைகிறாள் என்பதால் எம்பெருமான் ஸ்ரீநிவாசன், திருமகள் உறை மார்பன் என பக்தர்களால் அழைக்கப்படுகிறான்.

திருவேங்கடமுடையானின் திருமார்பிலே அகலாமல் வீற்றிருக்கும் தாயார் திருப்பதி அருகாமையிலும் எழுந்தருளி தன் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றாள். நாராயணவனத்தில் ஸ்ரீபத்மாவதியாகவும், திருச்சானூரில் அர்ச்சை வடிவில் அலர்மேல் மங்கையாகவும், பத்மாவதியாகவும், திருமலை திவ்ய திருத்தலத்தில் திருவேங்கடமுடையானின் இதயக்கமலத்தில் "வியூக லக்ஷ்மி"யாகவும், "பூதகாருண்ய லக்ஷ்மி" யாகவும் வீற்றிருந்து தன் பக்தர்களின் கோரிக்கைகளை எம்பெருமானிடத்திலே கூறி நிறைவேற்றும் கற்பக வல்லியாகத் திகழ்ந்து வருகிறாள்.

திருச்சானூரில் வீற்றிருக்கும் தாயாருக்கு வருடம்தோறும் கார்த்திகை மாதத்தில் வெகு விமரிசையாக பிரம்மோத்ஸவம் நடைபெறும். பிரம்மோத்ஸவத்தின் போது நாள்தோறும் பத்மாவதி தாயார் வெவ்வேறு வாகனங்களில் எழுந்தருள்வாள். இந்த வாகன சேவையின் தரிசன பலன்களையும் அத்தாயார் வழங்குகிறாள். அதாவது சிறிய சேஷ வாகனம்– யோக சித்தி, ஹம்ச வாகனம் – ஞானார்ஜன சித்தி, முத்துப்பந்தல் வாகனம் – தூய்மை, புனிதம், சிம்ம வாகனம் – எதிரிகளற்ற அரசு, கல்ப விருக்ஷ வாகனம் – அபிவிருத்தி, அனுமத் வாகனம் – புத்தி, பலம், புகழ், ஐச்வர்யம், யானை வாகனம் – மனோவிகாரஜெய சித்தி, சர்வ பூபால வாகனம் – ராஜ யோகம், கருட வாகனம் – சகலாபீஷ்ட சித்தி, சூரியப் பிரபை வாகனம் – ஞான சக்தி, சந்திரப் பிரபை வாகனம் – கருணா கடாக்ஷ சித்தி, திருத்தேர் – அகில மனோரத சித்தி, குதிரை வாகனம் – சகல காரிய வெற்றி, பஞ்சமி தீர்த்தம் – சகல பாபதோஷபரிகார சித்தி முதலியனவாகும்.

திருமலையே பூலோக வைகுண்டம். இங்கு கொலுவீற்றிருக்கும் ஸ்ரீநிவாச மூர்த்தியே வைகுந்தவாசனான பரவாசுதேவன். ஸ்ரீநிவாசனின் பட்டத்து ராணிதான் திருச்சானூரில் எழுந்தருளியிருக்கும் வைகுந்தவல்லி அலர்மேல் மங்கை தாயார் என்று போற்றப்படும் ஸ்ரீபத்மாவதி தாயார். அகிலத்தையும் கட்டிக்காக்கும் ஜகன்மாதாவான இத்தாயாரை முதலில் வணங்கிய பின்னர்தான் தந்தையான திருவேங்கடமுடையானை தொழ வேண்டும் என்பது ஐதீகம்.அப்பொழுதுதான் திருமலை யாத்திரை முழுமை பெறும்.

சுகமுனிவர் தவம் செய்து முக்தி பெற்ற இடம் திருச்சுகனூர். அது இப்போது திருச்சானூர் என்று திரிந்து அழைக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலானோர் அலர்மேல்மங்காபுரம் என்று இதைக் குறிப்பிடுகின்றனர். இங்கு பத்மஸரோவரம் என்று புராண பிரசித்தமான திருக்குளம் ஒன்று அமைந்துள்ளது. இத்தடாகத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள அலர்மேல்மங்கைத் தாயாருக்கு பிரம்மோத்சவத்தின் முடிவில் அவப்ருதம் (தீர்த்த வாரி உற்சவம்) நடைபெறுகிறது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதத்தில் சுக்லபக்ஷ பஞ்சமியில் நடப்பதால் இது பஞ்சமி தீர்த்தமென்று மக்களால் குறிப்பிடப்படுகின்றது. பல தேசங்களிலிருந்தும் பக்தர்கள் புறப்பட்டு வந்து இத்தீர்த்தத்தில் நீராடி தூய்மைப் பெற்று அலர்மேல்மங்கைத் தாயாரின் திருவருளுக்கு ஆளாகி தத்தமது கோரிக்கையின் பலனைப் பெற்றுவருவது கண்கூடு.

சில ஊர்களில் தெய்வத்திற்கு பெருமை சிறந்திருக்கும். மற்றும் சில இடங்களில் தீர்த்தத்திற்கு மகிமை உயர்ந்திருக்கும். இத்திருச்சுகனூரிலோ, அலர்மேல் மங்கைத் தாயாருக்கும் பத்ம ஸரோவரத்திற்கும் உண்டான மாட்சிமை ஒப்புயர் வற்றது. திருவேங்கடமுடையானால் தவம் செய்து பெறப்பட்டமை தாயாருக்கும், அப்பெருமானால் தோண்டப்பெற்று அத்தாயார் உதித்தமை பத்ம ஸரோவரத்திற்கும் சிறந்த பெருமையாகும்.

திருவேங்கடவன் எப்போதும் தன்னைப்பிரியாத அலர்மேல் மங்கையைப் பிரிவதும், மறுபடி தவம் செய்து பெறுவதும், குளம் தோண்டுவதும் ஏனென்று எழுகின்ற கேள்விக்குப் பாத்மபுராணம் க்ஷேத்திர காண்டம் 34ம் அத்தியாயம் விடையளிப்பதை சிறிது காண்போம்.

ஸத்வகுணமுள்ள பரம்பொருள் எதுவென்று நிச்சயிப்பதற்காக முனிவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஆராய்ந்து அதைத் தெரிந்துக் கொண்டு வருவதற்காகப் பிருகு முனிவரை அனுப்பினர். அவர் ஸத்யலோகம் சென்று பிரம்மதேவன் சபைக்குச் செல்ல, அப்பெருமான் முனிவரை நலம் விசாரித்தல், கண்கொண்டு பார்த்தல் எதுவும் செய்யாதிருக்கவே, அம்முனிவர் நான்முகக் கடவுளின் செருக்குடமைக் கொண்டு ரஜோ குணமுள்ளவராக முடிவுசெய்து, கைலாச மலைக்குச் சென்றார். அங்கு பார்வதியுடன் லீலை புரிந்துக் கொண்டிருக்கும் சிவபெருமான் முனிவருக்குக் காட்சியளிக்கவில்லை.

அம்முனிவர் அப்பெருமானை எப்போதும் போகத்தில் ஆழ்ந்திருப்பது காரணமாக தமோ குணமுடையவராக அறுதியிட்டு பின்பு வைகுந்தம் சென்றார். அங்கு வாழும் திருமாலை திருமார்பில் காலால் உதைத்தார். உடனே திருமால் எழுந்து மிகக் கடினமான அடியேனுடைய மார்பில்





# பஞ்சமி தீர்த்தம்


கீர்த்திமூர்த்தி உ.வே. தி.அ. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி,
திருப்பதி.



உதைத்ததால் தேவரீருடைய மெல்லிய திருவடி நொந்திருக்குமோ என்று உபசார வார்த்தைக் கூறி, அவர் திருவடியை வருடி பின்னர் அந்த முனிவரை பலவாறாக பூஜித்தார். முனிவரோ வெனில், தாம் உதைத்ததற்கு சிறிதும் சினமடையாமல், நம் காலைப் பிடித்து நல்வார்த்தை சொல்லி உபதேசித்த இந்த திருமாலே சத்வகுணம் படைத்த பரம்பொருள் என்று முடிவு செய்து, திரும்பி வந்து அச்செய்தியை மற்ற முனிவர்களுக்கு உரைத்தனர் என்னும் இக்கதை உலகில் மிகவும் பிரிசித்தமானதே. ஆனால் அம்முனிவர் திரும்பிய பின்பு வைகுந்தத்தில் நடந்த கதைப்பற்றி பாத்மபுராணம் கூறும் கதையை கேளீர்.



பிருகுமுனிவர் தான் வசிக்கும் திருமாலின் திருமார்பில் உதைத்ததனால் கோபம் கொண்ட திருமகள், வைகுந்தத்தை விட்டுப் பாதாளவுலகம் சென்று சேர்ந்து விட்டாள். அங்கு வாசம் செய்யும் கபில முனிவர் அவளுக்குக் கோயில்கட்டி ஆராதனை செய்ய, வெகுகாலம் திருமகள் அங்கு எழுந்தருளியிருந்தாள். இதற்குள் திருமால் திருமகளைத் தேடுவதற்காக பூலோகத்திற்கு வந்து 56 தேசங்களிலும் பல உருக்கொண்டு தேடிக் கொண்டே கொல்லாபுரத்தை அடைந்தார். அங்கு ஒரு கோயிலில் முன்பு அகத்திய முனிவரால் வழிபடப்பெற்ற அர்ச்சை வடிவிலுள்ள திருமகளைக் கண்டார். அங்கு பல முனிவர்களால் பூஜிக்கப்பட்டு வருகின்ற அத் திருமகளைத் தாமும் பூஜித்துக் கொண்டே பத்தாண்டு காலம் கழித்தார்.



அப்போது ஒருநாள் திருமகளைக் குறித்து ஓர் அசரீரி வாக்குத் தோன்றியது. "திருமகளை காணவிரும்பும் விஷ்ணுபகவானே கலங்காதீர். இங்கிருந்து தெற்கேச் செல்லும் கிருஷ்ணா நதிக்குத் தெற்கில் 22 யோஜனைத் தூரத்தில் உள்ளதும், முனிவர்கள் வசிக்கும் இடமுமாகிய சுவர்ணமுகி நதிக்கரையில் கடப்பாரைக் கொண்டு ஒரு தடாகம் தோண்டும். அதன் கரையில் தவம் செய்யும். தேவலோகத்திலிருந்து பொற்கமலமலர் கொடிகளைக் கொண்டு வந்து அக்குளத்தில் வையும். அதன் கரையில் பலவிதமான மலர்ச்செடிகளையும் நட்டுத் தோட்டம் ஏற்படுத்தும். அங்கிருந்துக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகாலம் திருமகளின் மந்திரத்தை ஜபம் செய்துக் கொண்டும், தாமரை மலர்களால் அவளை அர்ச்சனை செய்துக் கொண்டும் தவம் செய்வீராகில் அக்குளத்தில் ஒரு பொற்றாமரை மலரில் பதினாறு வயதிற்குட்பட்ட யுவதியாய்த் திருமகள் தோன்றுவாள். ஆகையால் சுவர்ணமுகி நதிக்கரைக்கு செல்வீராக என்றது அசரீரீ.





அத்தகைய நல்வார்த்தையை செவியுற்ற திருமால் கருடன் மீதேறி சுவர்ணமுகி நதிக்கரையைச் சேர்ந்து, பின்பு வராகப்பெருமாள் எழுந்தருளியுள்ள திருவேங்கடமலையை அடைந்து, அங்கு ஸ்வாமி புஷ்கரிணியைக் கண்டார். வராகப்பெருமாள்கோயிலின் அருகே கருட வாகனத்திலிருந்து இறங்கி தான் இன்னாரென்று யாரும் அறியா வண்ணம் ஓர் அரசகுமார வேடங்கொண்டு ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடிப் பல முனிவர்களால் விருந்திட்டு உபசரிக்கப் பெற்று, பின்பு காலையில் எழுந்து முனிவர்களிடம் விடைபெற்றுக் கருடனை குதிரையாக மாற்றி, அதன் மீதேறி பொற்றாமரை மலர்கள் நிறைந்த சுவர்ணமுகி நதியை அடைந்தார்.



அங்கு ஒரு சமமான இடத்தில் கடப்பாரையால் பூமியை அகழ்ந்து குளமொன்றை வெட்டினார். உடனே வாயுதேவனை நினைத்தார். அவன் எதிரில் வர அவன் மூலமாக தேவலோகத்திலுள்ள பொற்றாமரை மலர்க் கொடிகளை இந்திரனுடைய அனுமதியுடன் வரவழைத்து அக்குளத்தில் நட்டார். அதன் கரையில் கிழக்கு முகமாகச் சூரியதேவனைப் பிரதிஷ்டை செய்தார்.



அவனது அருளால் எப்போதும் மலர்ந்து இருக்கும் தாமரை மலர்களைக் கொண்டு, திருமகளைப் பெறுவதற்காகச் சூரிய பகவானை அர்ச்சனை செய்து வந்தார். விடியற் காலையில் லக்ஷ்மீ மந்திரத்தை ஒருநாளைக்கு மூவாயிரந் தடவை ஜபித்துக் கொண்டும், அக்குளத்தின் நன்னீரால் முன்னூறு தடவைகள் தர்ப்பணம் செய்துக் கொண்டும், அதன் பொற்றாமரை மலர்கள் ஆயிரங்கொண்டு திருமகளை அர்ச்சித்துக் கொண்டும், வேறுணவில்லாமல் பாலை மட்டுமே அருந்தி அச்சூரிய பகவானுக்கு எதிரில் மேற்கு முகமாக இருந்து லக்ஷ்மியை ஆராதனம் செய்வதிலேயே ஊற்றமுடையவராய் வேறெண்ணம் ஏதுமின்றி பன்னிரண்டு ஆண்டுகள் தவமியற்றினார்.இங்ஙனமிருக்க இப்பெருமானை இந்திரன், தன் பட்டத்திற்காகத் தவம் செய்யும் ஓர் மனிதனாக நினைத்து, இவர் தவத்தைக் கெடுக்க ஊர்வசி முதலிய தேவமாதர்களை ஏவினான். அவர்கள் இவரை மோஹிக்கச் செய்வதற்காக இவர் எதிரிலேயே தோன்றி ஆடவும் பாடவும் செய்தார்கள். சிறிது கண் திறந்து பார்த்த திருமால் ஒரு மாயையை உண்டாக்க அம்மாதர்கள் அனைவரும் கவிழ்தலையிட்டு ஓடினர். திருமால் தடையொன்றுமின்றி தவத்திலேயே ஊன்றலானார்.



இவ்வாறு பன்னிரண்டு வருஷங்கள் கழிந்து 13ஆம் ஆண்டில் கார்த்திகை மாதம் சுக்லபக்ஷம் பஞ்சமி திதி வெள்ளிக்கிழமை








உத்திராட நக்ஷத்ரம் வர அன்று மைத்தியமென்ற முகூர்த்தத்தில் அந்த தாமரைத் தடாகத்தின் நடுவில் ஒளித்திரட்சி ஒன்று தோன்றியது. அதன் மத்தியத்தில் பொற்றாமரை மலர்களால் நிருமிக்கப்பட்ட உயர்ந்ததோர் தேர் தென்பட்டது.

அந்த தேருக்குள்ளே ஆயிரம் இதழ்கள் பொருந்தியதோர் தாமரைமலர் போன்ற திருக் கண்களும், செந்தாமரைப்பூப் போன்ற இரு பாதங்களும், கமல மலரின் மணம் வீசுகின்ற திருவாயும், கோவைக்கனி போன்ற உதடுகளும் தானுமாய்ப் பல்வகை ஆபரணங்களும் பீதாம்பரமும் அணிந்து நறுமணம் மிக்க செங்கழுநீர் மாலையை கழுத்தில் அணிந்துக் கொண்டு திருமகள் அங்கு தவமியற்றுந் திருமாலை ஆசையுடன் கடைக் கணித்துக் கொண்டே தோன்றினாள்.

அப்போது தேவர்கள் துந்துபிகளை முழங்கினர். சங்குகள் ஒலித்தன. தேவமாதர் ஆடினர். கந்தர்வர் பாடினர். இவ்வொலி கேட்டு பிரம்மன், சிவன், இந்திரன் அனைவரும் அக்குளக்கரை அருகில் வந்தனர்.

திருமகளைக் கண்டனர். சில தேவர்களும் அசுரர்களும் இவள் நம்மையே மணம் புரிவாள், நம்மைத்தான் அடையப் போகிறாள் என்றபடி மனப்பால் குடித்துக் கொண்டு இருக்கையில், திருமகள் புன்சிரிப்புடன் எழுந்து வந்து தன் கழுத்திலணிந்த செங்கழுநீர் மலர் மாலையைக் களைந்து திருமாலின் கழுத்தில் ஸமர்ப்பித்து அப்பெருமானை அணைத்துக் கொண்டு, அங்கு குழுமியிருந்த எல்லோரையும் பார்த்தாள். திருமாலின் திருமார்பில் சேர்ந்த அத்திருமகளின் கடாக்ஷத்தால் தேவரும் அசுரரும் முனிவரும் தத்தம் கோரிக்கைகள் நிறைவேறப் பெற்றனர்.




நெடுநாள் பிரிந்து வருந்திய பின்பு தவமியற்றித் திரு மகளை பெற்ற பாக்கியசாலியான திருமால் “ஓ தாமரைத் தடாகமே! உனது கரையின்கண் பகவானுக்கு எதரில் தவமியற்றிய நான் திருமகளை நித்தியமாகப் பெற்றேன்,

இன்று முதல் நீ பத்ம ஸரோவரம்(உயர்ந்த தாமரைத் தடாகம்) என்று பெயர்பெற்று திருமகளின் அன்பிற்குப் பாத்திரமாய் மூவுலகங்களிலும் பிரசித்தி அடைய கடவாய்'' என்று அக்குளத்திற்கு வரமளித்துவிட்டு கருடவாகனமேறி ஆதிசேஷமலை சென்று சேர்ந்து ஸ்வாமி புஷ்கரிணியின் கரையில் திருமகளோடு மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார். இதுதான் பாத்மபுராணம் கூறும் கதை.

இப்புராணத்தின்படி அலர்மேல் மங்கைத் தாயார் கார்த்திகை மாதம் சுக்லபக்ஷம் உத்திராடம் வெள்ளிக் கிழமை கூடிய பஞ்சமியில் திருவவதாரம் செய்தமை தெரிய வருவதால் அப்பிராட்டியின் அர்ச்சா விக்ரகத்திற்கு பிரம்மோத்ஸவத்தின் 9வது நாளில் அவளுக்கு தீர்த்தவாரி உத்ஸவம் தொன்று தொட்டு நடத்தப்பட்டு வருகிறது.

அந்த நன்னாளில் குளத்தின் கரையிலுள்ள மண்டபத்தில் அலர்மேல் மங்கைத் தாயாருக்கு திருமஞ்சனமாகி தீர்த்தவாரி நடைபெற்றுத் திருமலையிலிருந்து திருவேங்கடமுடையானின் பிரசாதமாகிய பட்டுப் புடவை ரவிக்கை மஞ்சள் குங்குமப்பூ மலர் மாலை முதலியவைகள் சமர்ப்பிக்கப் பெற்று நிவேதனமான உடன் திவ்ய பிரபந்த பாராயணமும் – சாற்றுமறையும் செய்யப் படுகிறது.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 64



**இடமிருந்து வலம் :**

1. கூரத்தாழ்வான் தாயாரை போற்றிய சுலோகங்கள்....(5).
8. கடலில் தோன்றிய லட்சுமி தாயார்....(5)
16. .....(2)யின் தலையில் தாயார் உள்ளார்
20. தாயாரை...(4) என்றும் கூறுவர்
22. தாயாரின் ஒரு பெயர்.....(3)
27. மலர் மகள்...(4)
29. லட்சுமி இருக்கும் இடத்தில் ....(5) சுபீட்சமாக இருக்கும்

**வலமிருந்து இடம் :**

1. ரிக் வேதத்தில் தாயாரை போற்றும் சுலோகங்கள்....(5)
2. லட்சுமி பிராட்டி அமர்ந்த மலர்.....(4)
3. தாய்மை அருள்பவள்.....(4) லக்ஷ்மி.
4. புனிதமான ...(3)இலையிலும் தாயார் உள்ளார்.
5. நாராயணனின் துணைவி....(4)
7. பத்மாவதி தாயார் தோன்றிய நட்சத்திரம்....(6)
9. ஆண்டாள் தாயாரின் இயற் பெயர்....(2)
13. ஸ்ரீதேசிகன் அருளிய தாயாரின் போற்றல்....(4)
14. திருவரங்கத்தில் தாயாரின் நாமம்....(6)
17. திருமகளுக்கு உகந்த கிழமை....(3)
19. மஹாலட்சுமியை .......(3) என்றும் கூறுவோம்.
20. தாயாருக்கு தந்தையான முனிவர்....(3)
21. ஹரியின் மனைவி....(3)
23. வராஹ அவதாரத்தில் தாயார்....(3)
26. ஸ்ரீராமரின் துணைவி.....(3)
29. மஹாவிஷ்ணுவின் மனைவி....(6)

**மேலிருந்து கீழ் :**

1. மஹாவிஷ்ணுவின் மார்பில் மச்ச வடிவில் தாயார்....(5)
6. ஸ்ரீபுத்திரி.....(5)
8. மலரின் பெயரில் பிராட்டி....(5)
11. திருச்சானூர் திருக்கோயிலின் ஆகம விதி.....(6)
12. இந்த பெயரும் தாயாருக்கு உரியதே....(3)
15. பத்மாவதி தாயாருக்கு பிரம்மோத்ஸவம் நிகழும் மாதம்...(5)

தொகுப்பு :
திரு. டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கு விடை அறிய 43ம் பக்கம் பார்க்கவும்...

**கீழிருந்து மேல் :**

10. ...(3) லட்சுமி தாயாரின் வடிவங்கள்.
11. உலக நாயகிக்கு இந்த பெயரும் உண்டு....(4)
18. திருச்சானூர் திருக்கோயிலின் விமானம் ....(7)
24. தாயாருக்கு ....(3)லக்ஷ்மி என்ற பெயரும் உண்டு.
28. சகல செல்வங்களையும் அளிக்கும் பெயர்....(5)
30. தாமரையாள்....(6)

**த**ன்னிடம் பொருள் வேண்டி வந்த ஒரு ஏழைப் பிரம்மச்சாரிக்காக செல்வத்தின் அரசியான ஸ்ரீமஹா லக்ஷ்மி தாயாரைப் பிரார்த்தித்து ஸ்ரீதேசிகன் ஜபித்த சுலோகங்களே “ஸ்ரீஸ்துதி”. ***“யஸ்யாம் யஸ்யாம் திசி விஹரதே தேவீ த்ருஷ்டிஸ் த்வதியா: தஸ்யாம் தஸ்யாம் அஹமஹமிகாம் தன்வதே ஸம்பதோகா:”*** என்று இதை அவர் ஜபித்த மாத்திரத்திலேயே மேற்கூரையிலிருந்து தங்க மழை பொழிந்ததாம். அதை அள்ளி எடுக்க முடியாமல் திணரினானாம் அந்த பிரம்மச்சாரி. இந்த சம்பவத்தை காஞ்சிபுரம் திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீபெருந்தேவி தாயாரின் சன்னதியில் சித்திரமாக வரையப்பட்டுள்ளது. இதன் ஒவ்வொரு சுலோகமும் பக்திப் பரவசம், பொருட்செறிவு, அருள் வாக்கு அனைத்தையும் உள்ளடக்கியது.

இந்த “ஸ்ரீஸ்துதி” சுலோகங்களில் மிகவும் முக்கியமான, போற்றுதலுக்குரிய சில சுலோகங்களில் அர்த்த விசேஷங்களை இந்த சிறிய கட்டுரையின் மூலம் தெரிந்து கொள்வோம். அதற்கு முன்பாக இந்த சுலோகங்களின் தலைப்பான “ஸ்ரீ” என்கிற திருநாமத்தைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். ***“லக்ஷ்மீ புருஷகாரத்வே நிவ்திஷ்டா பரமர்ஷிபி:”*** என்கிறது சாஸ்திரம். பக்தர்களுக்கும், எம்பெருமானுக்குமிடையே ஒரு பாலமாகத் தாயார் செயல்படுவதை விளக்குவதே “ஸ்ரீ” என்கிற திருநாமம். வடமொழியில் இந்த திருநாமத்திற்கு ஆறு அர்த்தங்கள் உள்ளன. ***“ஸ்ரீயதே:”*** பக்தர்களால் தஞ்சமாகப் பற்றப்படுகிறாள். ***“ச்ரயதே:”*** தானே ஸ்ரீமந் நாராயணனைச் சரணமாகப் பற்றுகிறாள். ***“ச்ருணோதி:”*** தன்னைச் சரணமடைந்தவர்கள் கூறுகின்ற குறைகளைக் காது கொடுத்துக் கேட்கிறாள். ***“ச்ராவயதி:”*** பக்தர்களுக்காகப் பரிந்து பேசி அவர்களது வேண்டுகோளை பகவான் கேட்கும்படி செய்கிறாள். ***“ச்ருணோதி:”*** எம்பெருமானை அடையத் தடையாக இருக்கும் அவர்களது பாபங்களைத் தனது திருவருளால் நீக்குகிறாள். ***“ஸ்ரீணாதி”*** முடிவாகத் தன்னுடைய பக்தர்களை பகவானோடு சேர்த்து வைக்கிறாள். ஆக ***“சச்லஸ்ரீ,-சஸ நிச்லா, க, தாம்”*** என்னும்படியாக இந்த “ஸ்ரீ” எனும் மஹாலக்ஷ்மி “அகலகில்லேன்” என்று எம்பெருமானின் திருமார்பில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தே இந்த “ஸ்ரீ” என்கிற திருநாமம் அந்த “ஸ்ரீ” யைப் போற்றி எழுதப்பட்டதே தேசிகனின் “ஸ்ரீ” ஸ்துதி சுலோகங்கள்.



பெரிய பிராட்டியாரான ஸ்ரீதேவி தாயாரைப் போற்றுகின்ற இந்த ஸ்ரீஸ்துதி 25 சுலோகங்கள் கொண்டது. இந்த 25 சுலோகங்களில் முதல் 12 சுலோகங்களும் பிந்தைய 12 சுலோகங்களும் தாயாரின் பெருமையைப் பாடுபவை. நடுவில் இருக்கும் 13வது சுலோகத்தில் ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் உள்ளபடி பெரிய பிராட்டியை ஸர்வ லோகேஸ்வரியாய் பட்டாபிஷேகம் செய்த பெருமையை விளக்கியிருக்கிறார்.

# “ஸ்ரீ” யை போற்றுவோம்

**– திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,**
**திருப்பதி, 9440120758.**

முதல் சுலோகமே பிராட்டியிடம் சரணாகதி செய்யும் சுலோகமாக அமைந்துள்ளது.

*"மாநாநீத ப்ரதித விபவாம் மங்களம் மங்களாநாம்*
*வக்ஷ: பீடீம் மது விஜயிதோ பூஷயந்தீம் ஸ்வகாந்த்யா*
*ப்ரத்யக்ஷாநுச்ரவிக மஹிம ப்ரார்த்திநீநாம் ப்ரஜாநாம்*
*ச்ரேயோ மூர்த்திம் ச்ரியம சரணஸ்த்வாம் சரண்யாம் ப்ரபத்யே"*

எம்பெருமானின் திருமார்பையே நீ அமரும் பீடமாகக் கொண்டு எப்பொழுதும் அகலாமல் அங்கேயே உறைகின்றாய். உன் திருமேனியின் ஒளியால் அவனது திருமார்பையே அழகு பெறச் செய்கின்றாய்.

உலகத்திலுள்ள மங்களகரமான பொருட்களுக்கெல்லாம் மங்களத்தன்மையை அளிப்பவள் நீயே. இத்தகைய பெருமையுடன் "ஸ்ரீ" என்கிற திருநாமம் கொண்டவளான உனது திருவடிகளைப் பற்றுகிறேன் என்று முதல் சுலோகத்திலேயே நாம் முதலில் சரணடைய வேண்டியது தாயாரைத் தான் என்பதை அழகாக விளக்கியிருக்கிறார்.

## "பல ஸ்துதி"

**25 சுலோகங்களால் பிராட்டியை ஸ்தோத்திரம் செய்த ஸ்வாமி தேசிகன் காட்சி சுலோகமாக "பலஸ்துதி" யாக இவ்வாறு உரைக்கிறார்.**

*"உபசித குரு பக்தேருத்திதம் வேங்கடேசாத்*
*கலிகலுஷ நிவ்-ருத்யை கல்பமாநம் ப்ரஜாநாம்*
*ஸரஸித நிலயா: ஸ்தோத்ர மேதத் படந்த:*
*ஸகல குசல ஸீமா: ஸர்வபௌமா பவந்தி"*

**பக்திமிகு வேங்கடேசன் என்கிற வேதாந்த தேசிகனால் இயற்றப் பெற்ற ஸ்தோத்திரம் இது.**

**கலியுகத்தின் கொடுமைகளையும், பாபங்களையும் போக்க வல்லது. இதை சேவிப்பவர்களுக்கு சகல மங்களங்களும் உண்டாகும். முக்தியைப் பெறுவார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.**



*"ஆவிர்ப்பாவ: கலச ஜலதாவத்வரே வாபி யஸ்யா:*
*ஸ்த்தாநம் யஸ்யா: ஸரஸிஜவனம் விஷ்ணுவக்ஷ: ஸ்த்தவம் வா*
*பூமா யஸ்யா புவந மகிலம் தேவீ திவ்யம் பதம் வா*
*ஸ்தோகப்ரஜ்ஞை ரநவதிகுணா ஸ்துயஸே ஸா கதம்த்வம்"*

உன் பெருமையை என் போன்ற சிறியோன் ஆராய்வது முறையா? உன் பிறப்பு என்ன? நீ வாழுமிடம் எத்தகையது. உன் செல்வம் எத்தகையது? உனது திருக்கல்யாண குணங்களின் பெருமை என்ன? முதலில் திருப்பாற்கடலில் தோன்றினாய். பின் சீதையாக அவதரித்தப்போது ஜனகமகாராஜாவின் வேள்வி சாலையில் தோன்றினாய் என்று போற்றி, தாயார் கர்ப்பவாசமே இல்லாதவள். ஆதலால், எம்பெருமானை விட மேம்பட்டு விளங்குவதாலேயும் வாழும் இடமோ தாமரைக்காடு. அதாவது, பத்மத்தில் தோன்றியவளாம். இருக்கும் இடமோ எம்பெருமானின் திருமார்பு. திருக்கல்யாண குணங்களோ அளவற்றவை. இவ்வாறாக ஒவ்வொரு அம்சத்தை

எடுத்துக் கொண்டதும் தாயார் ஒப்பு உவமை இல்லா தவள். பரிசுத்தமானவள் என்று போற்றுகிறார்.

அடுத்து, தாயாரும், எம்பெருமானும் இணை பிரியாதவர்கள், எப்போதும் கூடியே நிற்பவர்கள் என்கிற பொருள்படியான சுலோகம்.

*"நிஷ்ப்ரத்யூஹ ப்ரணய கடிதம் தேவீ நித்யாந பாயம்*
*விஷ்ணுஸ் த்வம் சேநயதவதி குணம் த்வநத்வமந்யோந்ய லக்ஷ்யம்*
*சேஷச் சித்தம விமல மாநஸாம் மௌனைச் ச ச்ருத்நாம்*
*ஸம்பத்யந்தே விஹரண விதௌ யஸ்ய சய்யா விரேஷா:"*

நீயும், உன் நாயகனான எம்பெருமானும் எப்போதும் கூடியே நிற்கிறீர்கள். இந்த இணை என்றும் பிரியாதது, அழிவற்றது. "ச்ரிய:பதீ" என்று உன்னைக் கொண்டு உன்னையும் எம்பெருமானையும், "விஷ்ணு பத்நீ:" என்று அவனைக் கொண்டு உன்னையும் போற்றுகிறார்கள். நீங்கள் பள்ளி கொள்ளும் இடங்கள் மூன்று. ஒன்று திரு அனந்தாழ்வான் மடி. இரண்டு தூயமனம் கொண்ட யோகியரின் உள்ளம். மூன்றாவது வேதங்களுக்கு முடிவான வேதாந்தங்களாகும் என தாயாரும் எம்பெருமானும் கூடி பக்தர்களுக்கு அருள்பாலிப்பதை குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார். அடுத்து இந்த பாசுரத்தில் பிராட்டியின் திருநாமங்கள் பலவற்றைக் குறிப்பிட்டு அத்திரு நாமங்களால் நமக்கு மோக்ஷத்திற்கு வழிகாட்டு கின்றார்.

*"அஸ்யேசாநா த்வமஸி ஜகத: ஸம்ச்ரயந்தீ முகுந்தம்*
*லக்ஷ்மி: பத்மா ஜலதி தநயா விஷ்ணு பத்நீந்திரேதி*
*யந்நாமாநி ச்ருதி பரிபணாந்யேவ மாவர்த்த யந்தோ*
*நாவர்த்தந்தே துரித பவந ப்ரேரிதே ஜன்ம சக்ரே"*

எம்பெருமான் சர்வேஸ்வரன். அவனுக்குப் பத்தினியாக இருப்பதால் நீ சர்வேஸ்வரீ. உனக்கு "லக்ஷ்மீ", "பத்மா", "ஜலதிதனயா", "விஷ்ணு பத்நி", "இந்திரா" என்றெல்லாம் திருநாமங்கள் உண்டு. வேதங்கள் இந்த திருநாமங்களின் பொருட்களை விளக்குகின்றன. எல்லாமே காரணப் பெயர்கள். இவற்றைத் தொடர்ந்து ஜபிப்பவர்களின் பாபங்கள் கழிந்து, அவை முக்திக்கு வழிகாட்டுகின்றன. சுழல் காற்றில் அகப்பட்டது போல் தத்தளிப்பவர்களைப் போல தாங்கள் முன்பிறவியில் செய்த பாபங்கள் எல்லோரும் அல்லல்படுகின்றனர். உன் திரு நாமங்களை தொடர்ந்து அநுசந்தானம் செய்வதால்,



## திருச்சானூரில் தாயார் பவித்ரோத்ஸவம்


ஆலய பவித்திரத்திற்காக நடைபெறும் ஒரு உத்ஸவமே பவித்ரோத்ஸவம் எனப்படும். இந்த உத்ஸவம் ஆலய சுத்தி மற்றும் புண்யாஹவாசனம் போன்று அன்று. இது சம்ப்ரோஷணத்தை காட்டிலும் சிறந்த நிகழ்ச்சியாகும்

ஒவ்வொரு வருடமும் பாத்ரபதம் (புரட்டாசி) மாதம் தசமி, ஏகாதசி, த்வாதசி நாட்களில் கல்யாண மண்டபத்தில் இது நடைபெறும்.

முதல் நாள் பவித்திரம் சமர்ப்பித்தல், ஹோமங்கள் நடைபெறும். இரண்டாம் நாள் ஆலயத்தில் உள்ள அனைத்து விக்ரகங்களுக் கும் பவித்திரம் சமர்ப்பிப்பர். மூன்றாம் நாள் பூர்ணாஹுதி நடைபெறும். மூன்று நாட்களும் தாயார் திருமாட வீதிகளில் திருவீதிவலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளிப்பார்.

## அன்னையின் அருள்

**எம்பெருமானால் படைக்கப்பட்ட அனைவரும் அவரவர் வினைப்பயனை அனுபவிக்கும் பொருட்டு சொர்க்கம், நரகம், இன்ப வீடாகிய பரமபதத்தையும் அவரவர்கட்கு அளிக்கும்போது, பிராட்டியின் முகக்குறிப்பைப் பின் சென்று அவருடைய நோக்கத்திற்காக இணங்கவே எல்லாவற்றையும் அளிக்கிறார். இதனால் பிராட்டியின் முகக்குறிப்பில் எம்பெருமான் உலக ரக்ஷணம் செய்கிறான். அந்த உலக நாயகியான ஸ்ரீபத்மாவதி தாயாரை வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம்.**



உன் திருவடிகளில் சற்று சரணாகதி பண்ணி நற்கதி அடைவதால் நீயே சர்வேஸ்வரி என்று தேவிக்கு பட்டாபிஷேகம் செய்து மகிழ்கிறார். இப்போது வரும் சுலோகத்தில் பெருமாள், தாயார் இருவரும் எப்படி ஒற்றுமையோடு பக்தர்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை விளக்குகிறார்.

*''ஆபந்நார்த்தி ப்ரசமந விதௌ பத்த*
*தீக்ஷஸ்ய விஷ்ணோ:*
*ஆசக்யுஸ் த்வாம் ப்ரிய ஸஹசரீ*
*மைகமத்யோப பந்நாம்*
*ப்ராத்ர்ப்பாவை ரபி ஸம தநு:*
*ப்ராத்வமந்வீயஸே த்வம்*
*தூரோத்க்ஷிப்தைரிவ மதுரதா துக்தராசேஸ்*
*தரங்கை:''*

உன் நாயகன் ஒரு விரதம் பூண்டுள்ளான். எவன் துன்பமடைந்தாலும் அதை ஒழித்தல், இதை ஒரு வேள்வியாகவே செய்து கொண்டு இருக்கிறான். வேள்வி செய்பவனுக்கு அவனது மனைவி அருகில் இருக்க வேண்டுமல்லவா! அப்போது தானே அது பலன் தரும். இந்த வேள்வியை அவளோடு கூட இருந்து நீ நடத்திக் கொடுப்பதாக வேதங்கள் உரைக்கின்றன.

அடியார்களைக் காக்க ஸ்ரீராமன், ஸ்ரீகிருஷ்ணன் என்கிற திருமேனிகளைத் தரிக்கும் போது நீயும் சீதை, ருக்மணி என்கிற திருமேனிகளை எடுத்துக் கொண்டு அவனுடைய இந்த காத்தல் தொழிலுக்கு எல்லா வகைகளிலும் ஒத்தாசையாக இருக்கிறாய். ஒரு கனமும் அவனைப் பிரியாதவளான நீயும், எம்பெருமானும் கருத்தொரு மித்தவர்கள் என்பதற்கு இதை விட வேறு சான்று வேண்டுமோ? என்று ஆச்சரியப்படுகிறார். இந்த பாசுரத்தில் தாயாரின் திருஅவதார விஷயத்தைக் கூறுகிறார்.

*''ஆலோக்ய த்வாம் அம்ருத ஸஹஜே விஷ்ணு*
*வக்ஷ: ஸ்த்தலஸ்த்தாம்*
*சாபாக்ராந்தா: சரணமகமந் ஸாவரோதா:*
*ஸுரேந்த்ரா:*
*லப்த்வா பூயஸ் த்ரிபுவநமிதம் லக்ஷிதம் த்வத்*
*கடாக்ஷை:*
*ஸர்வாகார ஸ்த்திர ஸமுதயாம் ஸம்பதம்*
*நிர்விசந்தி''*

முன்னொரு காலத்தில், துர்வாச முனிவர் அளித்த புஷ்ப மாலையைத் தேவேந்திரனிடம் கொடுக்க அவன் அதை மதியாது தான் ஏறி வந்த ஐராவதத்தின் தலையில் போட, அதன் மகிமை அறியாத யானை அதைக் கீழே போட்டு மிதிக்க, கோபங்கொண்ட மகரிஷி, லக்ஷ்மிக்கு இருப்பிட மான புஷ்ப மாலையை அவமதித்ததால் இந்த செல்வங்களும் ராஜ்ய லக்ஷ்மியும் உன்னை விட்டு அகல்வாள் என்று சாபமிட தேவேந்திரன் முதலான தேவர்கள் அனைத்தையும் இழந்தனர்.

தவற்றுக்கு வருந்திய தேவேந்திரன் எம்பெருமானைச் சரணமடைய, பகவான் தானே முன்

எம்பெருமானின் பிரியமான மஹாலக்ஷ்மித் தாயார் திருமார்பில் உறைந்து கிடப்பதிலேயே விருப்பமுடையவள். அவருக்கு தயா குணத்தை விருத்தி செய்பவள். திருக்கரங்களில் தாமரை மலரை உடையவள். மேலும் தாமரை மலரையே வாசஸ்தலமாக உடை யவள். ஸ்ரீ என்னும் திருநாமத்தை உடையவள். வாத்ஸல்ய குணங்களால் பிரகாசிப்பவள். உலகங்களுக்கு எல்லாம் தாய் போன்றவள். அப்படிபட்ட பிராட்டியை வணங்கு கின்றேன்.



நின்று திருப்பாற்கடலைக் கடையச் செய்ததால் அதனின்று தோன்றிய அமுதத்தோடு, அமிர்த வல்லி யான நீயும் தாமரையில் ஆர்த்தபடியே அவதார மானாய். எல்லோரும் காண எம்பெருமானின் திருமார்பில் அமர, அனைவரையும் குளிர கடாக்ஷித் தாய். மூவுலகங்களும் தழைத்தன. தேவர்களும் இழந்த செல்வத்தைப் பெற்றனர். ஐராவதம் தான் செய்த தவற்றுக்குப் பரிகாரமாக, மற்ற யானை களுடன் சேர்ந்து உனக்கு அபிஷேகம் செய்து, பிராயச்சித்தம் செய்து கொண்டது. நீ அனைவரை யும் மன்னித்து அருள் செய்தாய் என்று தாயாரின் மன்னிக்கும் தயா குணத்தைப் போற்றி மகிழ்ந்தார்.

ஆக இந்த ஸ்தோத்திரத்தில் பெரிய பிராட்டி யான ஸ்ரீதேவித் தாயாரின் ஸ்வரூபம், திருமேனி சௌந்தர்யம், திருக்கல்யாண குணங்கள், விபவ வைபவங்கள், ஐச்வர்ய பிராப்தி, திருக்கண்களின் கடாக்ஷம் ஆகியவை மிக அழகாகத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

அந்த ஸ்ரீதேவித் தாயாரின் அம்சமான நமது கலியுகத் தெய்வமாம் திருவேங்கடத்து எம்பெருமா னின் பிராண நாயகியுமான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு சமர்ப்பித்து, திருப்பாத சமயங்களைப் பற்றி உய்வடைவோம்.

*"ஈஸாநாம் ஜகதோஸ்ய வேங்கடபதேர் விஷ்ணோர் பராம் ப்ரேயஸீம்*
*தத்வக்ஷஸ்தல நித்யவாச ரஸிகாம் தத்க்ஷாந்தி ஸம்வர்தினீம்*
*பத்மாலங்க்ருத பாணி பல்லவ யுகாம் பத்மாஸனஸ்தாம் ச்ரியம்*
*வாத்ஸல்யாதி குணோத்ஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகன்மாதரம்"*

## வசந்த உத்ஸவம்



ஒவ்வொரு வருடமும் வைசாகம் (வைகாசி) மாதம் பௌர்ணமி நாள் அன்று நிறைவடையும் உற்சவமாக மூன்று நாட்கள் நடைபெறும் வருடாந்திர உத்ஸவமே வஸந்தோத்ஸவம். வைசாக மாதம் சுக்ல பக்ஷ திரயோதசி முதல் ஆரம்பித்து பௌர்ணமி அன்று நிறைவடையும் வகையில் மூன்று நாட்கள் நடைபெறும். அபிஷேகம், நைவேத்தியம் ஆஸ்தானம், திருவீதி உலா என்று நடைபெறும் உத்ஸவத்தில் பங்கு கொள்ளும் பக்தர்களுக்கு நோய் நீங்கி ஆரோக்கியம் சித்திக்கும்.






# அன்னமய்யா போற்றும் தாயார்





அழகு என்பது என்ன? அருள் அழகு, அரவணைத்தல் அழகு, அன்பு அழகு, வரங்களை அள்ளிச் சொரிவது அழகு. இதையெல்லாம் அன்னையிடம், அண்ட சராசரங்களையெல்லாம் ஆயுள் ஆரோக்கியத்துடன் காக்கும் அலர்மேல் மங்கையிடம், ஓங்கிய சிகரங்களையுடைய திருமலையின் மேல் சேவை சாதிக்கும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் திருமார்பில் உறைபவளிடம்தான் காண முடியும் என அறுதி இட்டுச் சொல்கிறார் அன்னமய்யா.

இவருடைய ச்ருங்கார பதங்கள் அலர்மேல் மங்கையின் அழகு, நாயகனுடன் அவள் சேர்ந்திருத்தல், ஊடல் புரிதல் என அனைத்தையும் வருணிக்கின்றன. இங்கு சிலவற்றை நாம் அனுபவிக்கலாம்.

முதலில் நாம் பார்க்கும் பாடல் அனைத்து லட்சுமிகளும் எவ்வாறு திருவேங்கடமுடையானின் திருமார்பில் வாசம் செய்கிறார்கள் என்பதைக் கூறும் பாடல். அலர்மேல் மங்கை என்றாலும், பத்மாவதி என்றாலும் மஹாலட்சுமிதானே!

''பஸிடிசீரவாடவு'' என்ற பாடல். இங்கு திருவேங்கடவன் மஞ்சள் வஸ்திரத்தில் எவ்வாறு ஒளிர்கிறான் என்று துவங்கும் அன்னமய்யா, இந்த கீர்த்தனையின் மற்ற வரிகளில் அலர்மேல் மங்கையின் அழகைப் போற்றுகிறார். உன் நாயகி தன் பொன்னிற மேனியால் உனக்கு நன்றாகப் பொருந்துகிறாளோ?

பாற்கடலை கடையும் போது அவளுடன் தோன்றிய சந்திரன், சிந்தாமணி, ஐராவதம், பாரிஜாதத்தரு ஆகியவற்றிற்கு அவள் சகோதரி எனக் கூறுகிறார் .

அதனாலேயே பௌர்ணமி சந்திரனின் பொலிவும், சிந்தாமணியின் சகோதரி என்பதால் அழகான பல் வரிசை கொண்டவளாகவும், ஐராவதமும் அவளுடன் பிறந்ததால் அழகிய நடையும், பாரிஜாத மரத்தின் இலைகள் போல் அவள் பாதங்கள் மென்மையானவை என்றும்கூறுகிறார்.

மூன்றாவது சரணத்தில் அவள் கண்கள் தாமரை இதழ் போன்றவை. ஏனெனில் தாமரை மலர்கள் நிறைந்த பாற்கடலில் அவள் வசிப்பதனால் என்று கூறி, "ஓ வேங்கடேசா! உன் நாயகி அலர்மேல் மங்கை

உன் மார்பினில் மிக அழகாக ஒளி வீசுகிறாள்'' என்று வருணிக்கிறார். எவரால் முடியும் இப்படி வருணிக்க?

*''அலிவேணிநி பென்ட்லாடவய்யா''* எனும் கீர்த்தனை அலர்மேல் மங்கை பலவிதமான லட்சுமியின் வடிவம் கொண்டவள். பாற்கடலிலிருந்து தோன்றிய அவளைக் கல்யாணம் செய்து கொள்ள திருவேங்கடமுடையானை அழைக்க வேண்டுமா என்ன? ஆயினும் இந்தப் பாடலில் அந்த விநோதத்தைப் பாருங்கள்.

தேனிக் கூட்டம் போன்ற கருத்த பின்னலை உடைய அலர்மேல் மங்கையை திருமணம் செய்து கொண்டு, அவளுடைய தோழிகளின் கோரிக்கையை நிறைவேற்று. உன் மென்மையான புன்னகை பால் போன்ற வெண்மையானது. உன் அன்பான வார்த்தைகள் மன்மதனின் மர்மமான மந்திர வார்த்தைகள். திருவேங்கடமுடையான் அவளை ஏற்றுக் கொண்டார். அவளுடைய அணைப்பில் அவருடைய மென்மை இது. அனைவருக்கும் விருந்தானது.

கல்யாணக் கோலம் பக்தர்களுக்கு விருந்து என்பது உண்மைதானே! மனதைக் குளிரவிப்பது. அன்று நீ பார்த்த ஏக்கப்பார்வை உன் கையில் அட்சதையாயின இன்று. பெண்களால் தேர்வு செய்து சேகரிக்கப்பட்ட சன்னமான அரிசி மணிகள் தம்பதிகள் ஒருவர் தலைமீது மற்றொருவர் பெய்து கொள்ளும் அட்சதை ஆயிற்று.

அடுத்து அன்னமய்யாவின் லக்ஷ்மி கல்யாணமே என்ற கீர்த்தனை. மகிழ்ச்சியோடு இக்கல்யாணப் பாடலைப் பாடுகிறார். "ஓ தெய்வத் தம்பதிகளே!'' என்றழைத்து தொடர்கிறார். உங்கள் இருவரின் பார்வைகளும் அவள் கூந்தலில் ஒளிவீசும் ஆபரணங்களைப் போலவும், இருவர் நெற்றியிலும் கட்டப்பட்டுள்ள பாஷிகம் போலவும் விளங்குகிறது. உங்கள் இனிப்பான இதழ்கள் திருமண ஆபரணங்களைப் போல விளங்குகின்றன. உங்கள் கல்யாணம் மங்களகரமானது. உங்கள் சொல்லாடல் அதன்பின் மந்திரங்களாயும், உங்கள் பிரகாசமான நகைப்பு உங்கள் மீது பெய்யப்பட்ட அட்சதையைப் போலும் விளங்குகிறது. உங்கள் மேனி



## "தகுனைய்ய நீகு"

**–அன்னமய்யா பாடல்**

**இந்த ஒரே பாடலில் ருக்மிணியாக ஜெய லட்சுமியையும், சீதையாக வீர லட்சுமியையும் கொண்டவனே, ஓ ஹரி! சத்யபாமா நரகாசுரனைக் கொன்று உனக்கு போரில் வெற்றி தரும் சங்க்ராம லட்சுமி. ஆனால், நரசிம்ம அவதாரத்தில் இரண்யகசிபுவை அழித்த பிறகு, தேவர்களுக்கு உன் நாயகியின் ஆணைப்படி நீ வரங்களை அளித்ததனால் அவள் வரலட்சுமியானாள்.**

**லட்சுமியை உன் திருமார்பில் அனைத்து செல்வங்களோடும் எப்போதும் அமரச் செய்தாய். அவளே ஆதிலட்சுமி. அந்த கல்யாண லட்சுமியுடன் அவளுடைய வளங்களுடன் என் இதயத்திலும் வசிக்க வேண்டும்.**

**இத்தனை விதமாக லட்சுமியைத் துதித்து வேண்டும் அன்னமய்யா போன்ற பக்தர் மனதில் திருவேங்கடமுடையானும், தாயாரும் வசிக்க தடையும் உண்டோ?**

சிலிர்க்கும்போது இனிமையான வசந்தம் போல் உள்ளது. உங்கள் அணைப்பு அன்பானது. விவாஹம் நடக்கும் இடமோ மாபெரும் இடம். உங்கள் கல்யாணம் உங்களுக்கும் மற்ற எல்லோருக்கும் விமரிசையாக உள்ளது. நீங்கள் இருவரும் பிரிவே இல்லாத திருமண வாழ்வு வாழ்வீர்கள்.

இங்கு அன்னமய்யா பெரியாழ்வார் திருமாலுக்கு பல்லாண்டு பாடியதைப் போல், வேங்கடேச பெருமாளுக்கும் தாயாருக்கும் வாழ்த்தளிக்கிறார். உண்மையான பக்தர்கள் உள்ளம் ஒத்திருக்கத்தானே செய்யும்!

அலர்மேல் மங்கையின் அதிர்ஷ்டத்தை தோழிகளின் வாயால் கேட்க விரும்பும் "செலுலாரா சூடரே" என்ற கீர்த்தனையை நாம் பார்க்கலாம். ஒரு பெண் தன் மீது பரிவோடு கூடிய கணவனை அடைவது எவ்வளவு பெரிய பாக்கியம்? அவள் கணவன் அவள் சொல்லைத் தட்டாமல் கேட்கிறான். அவளுடனேயே எப்போதும் இருக்கிறான். அது பெரிய பாக்கியம் அல்லவா? கூறுங்கள், பெண்களே! கணவனால் மரியாதை செய்யப்படுபவள் பாக்கியசாலி. அவள் அவனது அன்பின் மீது கோபப்படுவதில்லை. களைப்பும் அடைவதில்லை. அவளைப் பாராட்டி அன்போடு கவனித்துக் கொள்கிறான். பெண்களே, சொல்லுங்கள், வேறு யாருக்கு இந்த பாக்கியம் கிடைக்கும்?

என்றோ 16–ஆம் நூற்றாண்டில் அன்னமய்யா இவ்வாறு பாடியிருந்தாலும் இன்றும் உலகில் பெண்கள் அனைவருக்கும் இது பொருந்தும் தானே!

அடுத்து தாயாரின் அழகைப் போற்றி வியந்து பாடும் பாடல் "ஏமனி பொகடுதுமே". அன்னமய்யா அலர் மேல் மங்கை தாயாரை பார்த்து, "அந்த அழகை எங்ஙனம் புகழ்வது? அது வசந்தத்தைப் போல வர்ணஜாலம் காட்டுகிறது" என்கிறார். நீ மென்மையான புன்னகையோடு வெட்கப்படும் போது அவை இனிமையான பூமஞ்சம் போல் உள்ளது. உன் தேன் போன்ற இதழ்கள் உன் பிரபுவிற்கு விருந்தாகிறது. உன் மென்னகை மறைந்தும் மறையாமலும் உள்ளது. உன் சிவந்த இதழ்கள் கற்பூர

## திருச்சானூரில் கோயில் ஆழ்வார் திருமஞ்சனம்

**ஆழ்வார்கள் தங்களுடைய இதயத்தில் பகவானை பிரதிஷ்டை செய்து வழிபடுவதைப் போல் ஆலயத்தில் விக்ரகங்களை பிரதிஷ்டை செய்து வழிபடுவதால் ஆலயமும் கோயில் ஆழ்வார் எனப் பட்டது. திருமஞ்சனம் என்றால் மங்கள ஸ்நானம். ஆலயத்தினை சுத்தம் செய்யும் நிகழ்ச்சியே கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் எனப்பெறும்.**

**கர்ப்பாலயத்தில் உள்ள உத்ஸவ மூர்த்தி விக்ரகங்கள், தங்க, வெள்ளி பாத்திரங்கள், கர்ப்பாலயம் சுவர்கள் உள்ளே அமைந்துள்ள ஆலயங்களையும் அதன் சுவர்களையும் சுத்தமாக கழுவுவார்கள்.**

**பிறகு "பரிமளம்" என்ற வாசனை பூச்சினை சுவருக்குப் பூசுவர். நாமக்கட்டி, ஸ்ரீசூரணம், கற்பூரம், கந்தம் பொடி, குங்குமம், கிசிலி கட்டை போன்ற வற்றின் அரைத்த கலவையையே பரிமளம் என்பர்.**





"நவரச முலதீநளினாக்ஷி" எனும் கீர்த்தனையில் தாமரை போல் கண்களை உடைய பத்மாவதி தாயார் நவரசங்களும் உருவெடுத்தவள். அவள் வேங்கடவனின் நாயகி. அவளுடைய கூர்மையான நகங்கள் வீரத்திற்கும், வண்ண உதடுகள் கருணைக்கும், தனங்கள் அற்புதத்திற்கும், அவள் அசைவுகள் நகைச்சுவைக்கும், மெல்லிய இடை பயத்திற்கும், கடுமையான பார்வை கொண்டால் கோபத்திற்கும், புருவங்கள் முடிச்சிடும்போது அருவருப்பிற்கும் எடுத்துக்காட்டு. அவள் நாயகனுடன் இணைதல் சாந்தரசம். ஒருவர்மீது ஒருவர் வைத்துள்ள அளப்பரிய காதல் சந்தோஷ ரசமெனும் பத்தாவது ரசம். வேங்கடவா, நீ அலர்மேல் மங்கையின் மீது மகிழ்ச்சியின் சாரத்தையே பொழிகிறாய். இங்கு பக்தி மேலிட்டு நவரசம் என்பதில் அந்த தெய்வத் தம்பதிகளுக்கு சந்தோஷம் எனும் ஒரு ரசத்தையும் சேர்க்கிறார் அன்னமய்யா.



வாசனை கூடிய தாம்பூலமாய் நறுமணம் வீசுகிறது. உன் தழுவலே திருவேங்கடமுடையானுக்கு அரண் மனை. நீங்கள் இருவரும் அன்பினால் ஒருவரை ஒருவர் கவர்ந்து உள்ளீர்கள். உங்கள் விளையாட்டு உலகிற்கே தெய்வீகத் திருவிழா.

உண்மைதானே! அந்தத் திவ்ய தம்பதிகள் மனம் குளிர்ந்திருந்தால் உலகிற்கே உற்சவம்தானே!

"பரமாத்முடைன" என்பது நாம் பார்க்கப் போகும் அடுத்த கீர்த்தனை. பரமாத்மாவான ஹரியின் ராணியான நீ உன் கவனத்தை பூமியில் வாழும் எங்கள் மீதும் தயை செய்து பொழிவாய். பிரமனுக்கும், மன்மதனுக்கும் தாயான நீ தேவதை களுக்கெல்லாம் தாயானவள்.

நீ அபரிமிதமான கருணை உள்ளவள். உன் கணவனிடம் எங்களது விருப்பங்களையும் நிறைவேற்றும்படிக் கூறுவாய். நீ காமதேனு, கல்பதரு, சந்திரன் ஆகியோருக்கு உடன் பிறப்பு. உன் கணவரின் மேல் உன் செல்வத்தைச் சொரிந்திருக்கிறாய். தகுந்தவருக்கு தர்மம் செய்பவள் நீயே. பாற்கடலின் குமாரத்தியே! நீ தாமரைப் பூவில் அமர்ந்தவள். இப்பிறவியிலும், என்றும் பக்தர்களைக் காப்பாற்றும் தாயே, நாங்கள் உன்னுடையவர்களாக இருக்க பாக்கியம் செய்திருக்கிறோம்.

தாயிடம் சொல்லி தந்தையின் கருணையை வேண்டுவது இன்றும் உலகில் சகஜம்தானே!

**சக்கணி தல்லிகி சாங்கு பளா :**

இக்கீர்த்தனை வேங்கடவனின் நாயகிக்கு தானும் பாராட்டுக் கூறி, கேட்கும் எல்லோரையும் போற்றிப் பாடச் சொல்லும் தாளக்கட்டோடு கூடியது. "சாங்கு பளா" என்பது போற்றிப்பாடுவோம் என்ப தாகப் பொருள் கொண்டது.

நம் அற்புதத் தாயாருக்கு, அவளுடைய தீஞ்சுவை இதழ்களுக்கு, அவளுடைய நளினமான அசைவுகள், மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் கண்கள் ஆகியவற்றிற்கும் போற்றி, கணவன் மேல் உரிமையோடு இடுப்பைச் சாய்த்து கையில் யாழுடன் நிற்கையில் அவள் மேன்மையை போற்றுவோம். அவளுடைய முத்தாலான அணிகலங்களுக்கும் அவற்றிலிருந்து வீசும் சந்தன மணத்திற்கும் போற்றி கூறி மகிழ்வோம், பெருமாள் தாயாரின் நெருக்கத்திற்கும் நாம் போற்றி எனப்பாடுவோம்.

ஆக, அன்னமய்யா அலர்மேல் மங்கைத்தாயார் மற்றும் திருவேங்கடமுடையான் இருவரின் அழகையும், அவர்கள் சேர்ந்து உலக மக்கள் அனைவரையும் காக்கும் பாங்கையும் வருணித்து நமஸ்கரிக்கிறார்.

**திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்**
**8125616876**



# ஸ்ரீநிவாசன் - பத்மாவதி கல்யாணம்

**- இதிகாசமயம் வீ.சீதாராமன், சென்னை.**

‘‘திருமலை ஏறும் முன்னேயே தீர்ந்து விடுகின்றன நமது கவலைகள்...! அலை அலையான ஆனந்தம் மட்டுமே... நாம் சுமந்து செல்லும் நிலை...! இஃதெங்ஙனம்...!

அடிவாரத்திலேயே குடி கொண்டு இந்த அற்புதத்தினை நிகழ்த்தி வரும் அன்னை, அலர் மேல் மங்கை... ஆகாச ராஜனின் புதல்வியாக அவதரித்து, பக்தர்களை பரிபாலித்து வரும்... பத்மாவதி தாயாரின் பிரமிக்க வைக்கும் பிரம்மோத்ஸவம்...!

பத்மாவதி தாயார் பத்ம சரோவரம் திருக்குளத்தில் தோன்றிய கார்த்திகை மாதம் பஞ்சமி திதி உத்திரட்டாதி நட்சத்திர நாளன்று நிறைவடையும் வகையில் இந்த பிரம்மோத்ஸவம் நடத்தப்பட்டு வருகிறது.

பரந்தாமன், பத்மாவதியை பாணிக்ரஹணம் செய்து கொண்ட பரவசம் பொங்குமொரு வரலாற்றினை சுவைப்போம். இதன் துவக்கம், தாயாருக்கு முற்பிறவியிலேயே துவங்கி விடுகிறது. முன் ஜன்மம் கொண்டது. திரேதா யுகத்தில் ஸ்ரீராம அவதாரம் நிகழ்ந்த காலம். சம காலத்திலேயே மஹாலக்ஷ்மியின் “அம்ஸாவதாரமாக”, “வேதவதி” என்ற பெண்ணாக அவதாரம் கொள்கிறாள். பேரழகுடன் பெண்களுக்குரிய சர்வ அங்கலக்ஷணங்களுடன், பிறந்த வேதவதிக்கு, நாட்டம் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் மீதுதான். அவதார புருஷனை அண்ட இயலுமா? நிச்சயமாக நிறைவேறாது என்று ஒரு நிதர்சனமான நிலை. கலங்கவில்லை வேதவதி. கடுமையான தவத்தினை மேற்கொண்டாள். தவம் வளர வளர அவளுடைய தெய்வீக தேஜஸும் வளர்ந்தது.

லங்காதிபதி ராவணேஸ்வரன் மாபெரும் தவ வலிமை கொண்டவன். அபார சிவ பக்தன். தனது தவத்தின் வலிமைதனை தவறான வழிகளில் கரைத்து வந்தான். காம இச்சை மட்டுமே பிரதானமாக இருந்தது. ஒரு சமயம் அதி அற்புதமான தேஜஸ் கொண்ட தபஸ்வினியான வேதவதியை கண்ணுற்றான். தன்னுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ள, தயங்காமல் வேதவதியை அணுகினான். ஸ்ரீராமனையே மணந்து கொள்வதென்று தவம் மேற்கொண்ட பெண் தவறான இச்சை கொண்ட அரக்கனை துச்சமென நினைத்து, தன்னிடம் நெருங்க வேண்டாம் என்று எச்சரித்தாள். பலாத்காரம் செய்ய முயன்ற பாதகனுக்கு சாபமிட்டாள். “பெண் இச்சையால் என்னை பலவந்தம் செய்த நீ உன் அழிவிற்கு ஒரு பெண் இச்சையே காரணமாகும்” என்று கடுமையான சாபம் அளித்தாள்.

ஸ்ரீராமனை அடைவதற்காகவே காத்து வந்த கற்பினை காக்க... அக்னியில் பிரவேசம் செய்தாள். அவளுடைய தூய தவ வலிமை, அக்னி தேவனை குளிரச் செய்தது. அக்னி பகவான் சிறிதும் தகிக்காமல் காப்பாற்றி விட்டான்.

அக்னியில் இருந்து மீண்ட பிறகே, அவள் ஸ்ரீராம பிரானை சந்திக்கும் பாக்கியம் கிட்டியது. தன்னுடைய கோரிக்கையை ஸ்ரீராமன் திருவடியில்

சமர்ப்பித்தாள். அவதாரத்தில், ஏக பத்தினி விரதம் கொண்ட ஸ்ரீராமன், தன் னிலை விளக்கினான்.

கலியுகம் வரை காத்திருக்கவும், திருமலையில் நான் ஸ்ரீநிவாசன் என்ற பெயரில் தோன்றுவேன். அந்த மலையை ஆளும் ஆகாச ராஜன் என்ற மன்னனுக்கும், அவனது மனைவி தரணி தேவிக்கும், நீ புதல்வியாகப் பிறப்பாய். அப்பிறவியில், நானே உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன்...'' என்று அருளினார் ஸ்ரீராமபிரான்.அவ்வாறே வேதவதி, அலர்மேல் மங்கை என்றும் பத்மாவதி என்றும், தாமரைப் பூவில் தோன்றி, ஆகாசராஜனுக்கும் – தரணி தேவிக்கும் மகளாக வளர்ந்தாள்.

பிருகு முனிவரின் ஆணவம் அழிக்கப்பட்ட நிலையில், பரந்தாமனிடம் ஊடல் புரிய சினம் கொண்ட மஹாலக்ஷ்மி பூலோகம் வந்து கோல்ஹாபூரில் இறங்கியதாக ஒரு வரலாறு உண்டு. மஹாலக்ஷ்மியை தேடி வந்த திருமால், திருமலை மீது வந்து நின்ற வரலாறும், வகுளா தேவியின் வளர்ப்பு மகனாக ஸ்ரீநிவாசனாக விளங்கியதும் வாசகர்கள் அறிந்த வரலாறு. (ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில், கோகுலத்தில் ஸ்ரீகிருஷ்ண



ரின் தாயாக இருந்த யசோதையே, வகுளா தேவியாக திருமலையில் அவதாரம் கொண்டாள்.)

வகுளா தேவியால் வளர்க்கப்பட்ட ஸ்ரீநிவாசன், வேதவதியாக முன் ஜென்மம் கொண்ட பத்மாவதியை தான் கொடுத்த வாக்குப்படி கைப்பிடிக்க வேண்டுமல்லவா? லீலாவினோத சூத்ரதாரியான, ஸ்ரீநிவாசன் தனது நாடகத்தை துவங்கினான். பேரழகு மிக்க குறி சொல்லும் ஒரு ''குறத்தியாக'' வடிவம் கொண்டார். ஆகாச ராஜனும் அவன் மனைவியும் குறத்தியைப் பார்த்தனர். அவளது பேரழகும், முகத்தில் இருந்த பிரகாசமும் அவர்களை அறியாமலேயே, அவளை, அரண்மனைக்குள் அழைக்க வைத்தது.

பத்மாவதியிடம் அழைத்துச் செல்லப்பட்டாள் அழகிய குறத்தி. அவர்கள் இடையே நடந்த உரையாடல் உணர்ச்சிவசம் கொண்ட ஒரு பகுதியாகும்.

குறத்தியிடம் ... உனக்கு எந்த ஊர்? ... என்று துவங்கினாள் பத்மாவதி.

“பல மலைப் பிரதேசங்களின் பெயர்களைக் கூறி, அங்கெல்லாம் பயணம் முடித்து திருமலைக்கு வந்து உனக்கு குறி சொல்ல வந்த எனக்கு நான் செல்லுமிடமெல்லாம் எனது சொந்த ஊரே” என்றாள் குறத்தி.

“யாருக்கெல்லாம் .... குறி சொல்வாய்?”

“தெய்வப் பிறவிகள் அனைவருக்கும் நான் சொல்லும் குறி தவறாது”

“எங்கே... காட்டு உன் திறமையை'' என்றாள் பத்மாவதி.

பத்மாவதியின் கையைப் பிடித்தாள் குறத்தி. “எந்தக் கை, இப்போது, உன் கையைப் பற்றி இருக்கிறதோ, அந்தக் கைக்கே, நீ

சொந்தமாவாய்" என்று குழைந்தாள். பத்மாவதிக்கு ஏதும் விளங்கவில்லை. உனது உளறல் குழப்பமாக உள்ளது என்ன சொல்ல வருகிறாய்" என்ற பத்மாவதி ஏதும் புரியாமல் குறத்தியைப் பார்க்க, “இளவரசி... உன் மனதுக்குப் பிடித்தவனே, உனக்கு கணவன் ஆவான்...." என்றாள் குறத்தி. குறத்தி வடிவில், பெருமாள் கையைப் பிடித்ததும் அந்த க்ஷணமே பத்மாவதிக்கு பேருவகை பொங்கியது. ஓங்கி உலகளந்த உத்தமனே தனது கைப் பிடிக்க வேண்டும் என்ற அவா அலை மோதியது.

இதனைத் தொடர்ந்து, பத்மாவதியை காண வந்தார் ஸ்ரீநிவாசன். தனது விருப்பத்தினை தெரிவித்த பெருமானை, தோழிகளும் துரத்தி அடித்தனர். தனது வளர்ப்புத் தாயான வகுளா தேவியிடம் சென்று முறையிட்டார் ஸ்ரீநிவாசன். ஆகாசராஜனிடம் தூது சென்றாள் வகுளாதேவி. தன்னால் வளர்க்கப்படும் மகன் வைகுண்ட வாசனின் பூரண அம்சமே என்று தெரியப் படுத்தினாள்.

மன்னன் மகளை மணக்க ஏராளமான செல்வம் தேவைப் பட்டது. ஸ்ரீநிவாசன் அதற்கு வேண்டிய செல்வத்தை குபேரனிடம் இருந்து கடனாகப் பெற்றதாகவும், தனது பக்தர்கள் மூலம் வரும் காணிக்கையை வட்டியாக தந்து விடுவதாகவும், கலியுகம் முடியும் முன் கடனை தீர்த்து விடுவதாக வாக்கு அளித்ததாகவும் ஒரு சுவையான வரலாறு உண்டு.

விண்ணோர் அனைவரும் வியந்து நோக்க, ஸ்ரீநிவாசன்–பத்மாவதி திருமணம் அமோகமாக நடந்தது. சில உண்மைகளை உலகுக்கு உணர்த்த வேண்டி, மகரிஷி நாரதர் ஒரு சில்மிஷம் செய்தார். மஹாலக்ஷ்மியிடம் சென்றார். வைகுண்டத்தில் இருந்து இறங்கிய நாராயணன், மற்றொரு விவாஹம் செய்து கொண்டதாக தெரிவித்ததும், மஹாலக்ஷ்மி கடும் சினம் கொள்கிறாள். அப்போது பெருமாள் அவதார ரகசியங்களை விளக்குகிறார்.

“திரேதாயுகத்தில் நீ சீதையாக இருந்த போது, அரக்கன் ராவணேஸ்வரன் உன்னை அபகரிக்கிறான். அவ்வமயம் அவனால் கவர்ந்து செல்லப்பட்ட பெண் உண்மையில் நீ அல்ல. அவளே மாயா சீதை. உனது மாயவடிவம். இராவண சம்ஹாரம் முடிந்த பின், அக்னிப்ரவேசம் கொண்டது மாயா சீதை. அக்னி பகவானால் காக்கப்பட்டு, அடைக்கலம் கொடுத்து, வெளியில் மீட்கப்பட்டதே உன் உண்மை வடிவமாகும்".அக்னி பகவானால் காக்கப்பட்ட மாயா சீதையே... வேதவதியாகவும் தொடர்ந்து பத்மாவதியாகவும் தோன்றினார்கள்.



அனைத்தும் நீயே. உனது அம்சங்களே" ... என்று எடுத்துக் கூற மஹாலட்சுமி சாந்தமானாள். பிறகு மஹாலக்ஷ்மியை தனது மார்பினில் ஏற்ற அச்சுதன் ஆணைப்படி, அலர்மேல் மங்கையாக அவதரித்த பத்மாவதி, பத்மஸரோவர் என்ற தீர்த்தக் கரையில் கோயில் கொண்டு அருள் பாலித்து வரும் அற்புதம், வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தெய்வீக தத்துவங்கள் நிறைந்த வரலாறாகும்.

திருப்பதி செல்லும்போது, முதலில் சுவர்ணமுகி நதிக் கரையில் உள்ள அலர்மேல் மங்கையை சேவிக்கலாம். பின் அவளது அருள் மழையில் நனைந்து ஆனந்தமாக திருமலை சென்று திகட்டாத சேவை பெற்று உய்யலாம். ஸ்ரீபத்மாவதி தாயாரின் பரிபூர்ண அருளினை பெற்று குடும்பத்தில் உண்டாகும் அனைத்து பிரச்சனைகளும், ஆதவனைக் கண்ட பனி போல மறைந்திட செய்யும் மந்திரம்.

# திவ்ய பிரபந்தத்தில் திருமகள்

திரு. ஆர். கண்ணன்,
பெங்களூரு, 93435 83416.

எம்பெருமானுக்கு திருமால் மற்றும் ஸ்ரீநிவாசன். அதாவது பெரிய பிராட்டியான ஸ்ரீமகாலக்ஷ்மியுடன் சேர்ந்தவன் மற்றும் அவளைத் தனது திருமார்பில் தரித்திருப்பவன் என்று பொருள்.

மேலும், பெருமாளை ஸ்ரீயப்பதி – பிராட்டிக்குப் பிரியமான பர்த்தா என்றும், லக்ஷ்மிபதி என்றும் குறிப்பிடுகின்றோம். ஆகையால் பரதத்வமான எம்பெருமானும், ஸ்ரீதத்துவமான பிராட்டியும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத தத்வங்களாகக் கருதப் படுகின்றனர்.

பிராட்டி எம்பெருமானுடன் ஒன்றியிருப்பதால், ச்ருதிகள் கூட அவளைப் பிரிந்து செல்வதில்லை என்று பராசரபட்டர் அருளிச் செய்கிறார். எம்பெருமானும் பிராட்டியும் சேர்ந்தே நமக்கு அருள்வர். அதாவது இருவருமே நமக்கு ரக்ஷகர்கள். அவர்களே நமக்கு சேஷிகள் – அதாவது நமது கைங்கர்யங்களை ஏற்றுக் கொள்பவர்கள். இதனை ஸ்வாமி தேசிகன் "தம்பதி தைவதம் ந:" என்று தன்னுடைய ஸ்ரீஸ்துதி என்னும் ஸ்தோத்திரத்திலே அருளி உள்ளார்.

எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் எல்லா கல்யாண குணங்களும் நிறைந்திருந்தாலும் பெருமாளிடம் ஆண்மைக்குரியனவான ஸ்வாதந்தரியம், எதிரிகளை ஒழித்தல், தவறு செய்பவர்களுக்குத் தண்டனை அளித்தல் முதலிய குணங்களும், பிராட்டியிடம் பெண்மைக்கே உரித்தான மென்மை, கருணை, பொறுமை முதலியவைகளும் ஓங்கி நிற்கும். உலகுக்கெல்லாம் தாயாகிய பிராட்டியின் மேன்மையை சற்றே அனுபவிப்போம்.

**ஸ்ரீவேங்கடேச ப்ரபத்தி தொடங்கும்முன் கூறப் படும் சுலோகம் :**

எம்பெருமானுக்கு இரண்டு வடிவங்கள் தான் உண்டு. அதாவது தன்னை அடைவதற்கு அவனே உபாயம், அவனே உபேயம். ஆனால் பிராட்டிக்கோ மூன்று வடிவங்கள் உண்டு என்பார்கள். அவள் உபாயம் மற்றும் உபேயமாக இருப்பதுடன் புருஷகாரமாகவும் (எம்பெருமானிடம் சிபாரிசு செய்பவளாகவும்) இருப்பாள். தன் ப்ரிய தேவியான பிராட்டி காட்டிக் கொடுக்கும் எவரையும் எம்பெருமான் ஒரு போதும் கைவிட்டதில்லை.

இதனை ஸ்ரீநடாதூர் அம்மாள் என்னும் ஆசார்யர், **"ஆகாரத்ரய ஸம்பன்னாம்"** என்று அருளிச் செய்துள்ளார்.



எம்பெருமான் தான் செய்யும் ஸ்ருஷ்டி, ஸ்திதி மற்றும் லயம் முதலிய ஜகத் வியாபாரங்களில் பிராட்டியின் இசைவு பார்த்து மகிழ்கிறான் என்று ஆழ்வான் அற்புதமாக அருளிச்செய்வார்.

தன் அடியார்க்கு ஐச்வர்யம், கைவல்யம் மற்றும் பரமபதம் அளித்தபோதிலும், அது போதாது என்று சற்றே வெட்கமுற்றவள் போல் காட்சி அளிக்கும் பிராட்டியின் உதார குணத்தை ஸ்ரீபராசரபட்டர் போற்றுவார்.

ஸ்ரீராமாநுஜாசார்யரோ, பெரிய பிராட்டியின் குணத்தைக் கூறிக்கொண்டு அவளிடம் சரணம் அடைந்து அனுமதி பெற்ற பின்னரே பெருமாளிடம் சரணாகதி செய்கிறார். ஸ்வாமி தேசிகன் பிராட்டியின் கடாக்ஷம் எங்கெல்லாம் படுகிறதோ

**பிராட்டி பெருமாளுக்கு சமமான வைபவம் உடையவள் என்று தெரிவிக்கும் பாசுரம் :**



முதலாழ்வார்கள்– பொய்கையார், பூதத்தார், பேயார் மூவரும் திருக்கோவலூர் மிருகண்டு முனிவர் ஆசரம இடைக்கழியில் தங்களை இருளில் நெருக்குபவரைக் காண விரும்பினார்கள். பொய்கையார் "வையம் தகளியா" என்று ஒரு விளக்கேற்றினார். பூதத்தார் "அன்பே தகளியா" என்று இன்னொரு விளக்கை ஏற்றினார். அங்கு அவர்கள் கண்ட காட்சியை பேயாழ்வார் விவரிக்கிறார்.

*"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்*
*அருக்கன் அணி நிறமும் கண்டேன்"*

இங்கு அவர்கள் முதலில் கண்டது திருவாகிய மஹாலக்ஷ்மியைத்தான், பிறகுதான் எம்பெருமான் மற்றும் அவனுடைய சங்கு சக்கரங்களைக் கண்டார்கள் மஹாலக்ஷ்மியின் கடாக்ஷம் பெருகிற்று.



அங்கெல்லாம் செல்வம் கொழிக்கும் என்று அருளிச் செய்தார். ஸ்ரீஆளவந்தார், ஸ்ரீகூரத்தாழ்வான் ஆகிய இருவருமே, தங்கள் ஸ்தோத்திரங்களில் பிராட்டியின் பெருமை (ஸர்வஜ்ஞான எம்பெருமான் மற்றும் பிராட்டியாலும் கூட) அளவிடமுடியாது என்றே அருளிச்செய்கின்றனர்.

*"திருமகளும் மண்மகளும் ஆய்மகளும் சேர்ந்தால்*
*திருமகட்கே தீர்ந்தவாறு என் கொல்"*

– முதல் திருவந்தாதி –42

பூதேவி மற்றும் நப்பின்னை(நீளாதேவி) சேர்ந்திருந்த போதிலும் ஸ்ரீதேவியே பிரதானமானவர். எம்பெருமான் அனுபவம் மிகுந்து வழிந்தோடும் போது வடிகால்கள் போன்று திகழ்பவர்கள் மற்ற தேவிமார்கள். மேலும் அவர்கள் பெரிய பிராட்டியின் அங்கங்களாக கருதப்படுவார்கள்.

வேதங்களின் ஸாரம் எம்பெருமானின் திருநாமத்தை ஓதுவதே. அதிலும் மாதவன் என்ற திருநாமம் சிறப்புடையது. மாதவன் என்றால், மா– என்கிற மஹாலக்ஷ்மி நித்யவாஸம் செய்யும்

## பிராட்டியின் பெருமையைப் பேசும் திவ்யபிரபந்த பாசுரங்கள்

- **எம்பெருமானின் திருமார்பினில் பிராட்டி வாசம் செய்கிறாள்.**
- **மடவாளை மார்வில் கொண்டாய்! மாதவா! (திருவாய்மொழி 1.5.5);**
- **பூவின்மேல் மாது வாழ் மார்பினாய்! (திருவாய்மொழி 3.1.6);**
- **மைய கண்ணாள் மலர்மேல் உறைவாள் உறைமார்பினன் (திருவாய் மொழி4.5.2);**
- **அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பா (திருவாய்மொழி6.10.10);**
- **என் திருமகள் சேர் மார்வனே! (திருவாய் மொழி7.2.9)**
- **திகழ்கின்ற திருமார்வில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமாலார் (திருவாய்மொழி 10.6.9)**
- **வடிவாய் நின் வலமார்பில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு (பெரியாழ்வார் திருமொழி 1.1.2)மற்றும் இது போன்ற பல பாசுரங்கள்.**



**பிராட்டியும் மோக்ஷத்திற்கு உபாயமாகிறாள் என்றுணர்த்தும் சில பாசுரங்கள் :**



- ♦ திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடைய பிரானார் இருமை வினை கடிவாரே (திருவாய்மொழி 1.6.9)
- ♦ திரு நாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ (திருவாய்மொழி 4.1.1)
- ♦ வேரி மாறாத பூமேலிருப்பாள் (திருவாய்மொழி 4–5–11);
- ♦ ஒண்தொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப கண்ட சதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியை (திருவாய்மொழி4–9–10);



- ♦ பண்டைநாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு (9–2–1);
- ♦ பூவளரும் திருவடிகளால் அருள் பெற்றுப் பொன்னுலகில் பொலிவர் (பெரிய திருமொழி 11–6–10) மற்றும் இது போன்ற பல பாசுரங்கள்.
- ♦ பெருமாளை விட்டு பிராட்டியைப் பற்ற நினைத்தான் இராவணன், அவன் அழிந்தான். பிராட்டியை விட்டு பெருமாளைப் பற்ற நினைத்தாள் சூர்ப்பனகை, அவள் காதும் மூக்கும் அறுபட்டாள். ஆகவே பெருமாளும் பிராட்டியும் சேர்த்தே வழிபடவேண்டும். அதாவது நமக்கு பிராட்டியும் பெருமாளும் சேர்ந்தே உபேயம். இதனை கீழ்க்கண்ட பாசுரத்தின் வரிகள் நன்கு உணர்த்துகின்றன.
- ♦ “தொண்டரோர்க்கு அருளி தடங்கொள் தாமரைக்கண் விழித்து நீ எழுந்து உன் தாமரை மங்கையும் நீயும் இடங்கொள் மூவுலகும் தொழ இருந்து அருளாய்” (திருவாய்மொழி 9–2–3)

திருமார்பை உடையவன் என்று பொருள். இதனை பூதத்தாழ்வார் அருளிச்செய்திருப்பதாவது:

*“மாதவன் பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு”*

–இரண்டாம் திருவந்தாதி 39

திருமழிசை ஆழ்வார் பரதத்வ நிர்ணயம் செய்வதில் வல்லவர். ஜகத் காரண வஸ்து ஸ்ரீமந் நாராயணனே என்று தன்னுடைய நான்முகன் திருவந்தாதியில் தெளிவாக அருளிச்செய்தவர். அவர் பிராட்டியை அருளிச் செய்ததாவது:

*“திருவில்லாத் தேவரை தேறல்மின் தேவு”*

–நான்முகன் திருவந்தாதி –53

திருவாகிய மஹாலக்ஷ்மியுடன் கூடிய தேவனே. அதாவது ஸ்ரீயப்பதியே மோக்ஷப்ரதன்...அவனே உபாசிக்கத்தகுந்தவன் மற்றைய தேவர்கள் மோக்ஷத்திற்கு உத்தேசியரல்லார் –என்று மிகத்தெளிவாக அருளிச்செய்கிறார். ப்ரபந்த ஜன கூடஸ்தர் எனப்படும் ஸ்ரீநம்மாழ்வார் அலர்மேல்மங்கையுறை மார்பனான திருவேங்கடமுடையானிடமே சரணாகதி செய்வதிலிருந்து பெரிய பிராட்டியும் உபாயம் ஆகிறாள் என்பது தெளிவு (திருவாய்மொழி 6–10–10).பெரியாழ்வார் எம்பெருமான் கருட வாகனனாய் வானில் தோன்ற. அந்த காட்சியைக் கண்ணுற்ற ஆழ்வார் மங்களாசாசனம் செய்யும்போது பிராட்டிக்கும் மங்களாசாசனம் செய்கிறார்.

*“வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டே”* என்றபடி.

திவ்யபிரபந்தத்தில் இயற்பா பகுதியில் கடைசி பிரபந்தம் இராமாநுச நூற்றந்தாதி ஆகும். இதன் முதல் பாசுரமும் கடைசி பாசுரமும் பிராட்டியின் புகழை பறைசாற்றும்.

*“பூமன்னு மாது பொருந்திய மார்வன்...”*என்று தொடங்கும் இந்த பிரபந்தம் *“அங்கயல் பாய்வயல் தென்னரங்கன் அணி ஆகமன்னும் பங்கய மாமலர்ப் பாவையை போற்றுதும்”* என்று நிறைவடைகிறது.

ஆகவே திவ்ய பிரபந்தம் திருப்பல்லாண்டு தொடக்கம் முதல் இராமாநுச நூற்றந்தாதிவரை பிராட்டியின் பெருமையை விளக்குகிறது என்றால் அது மிகையாகாது.






30-10-2021 அன்று திருப்பதி மஹதி கலையரங்கில் நடைபெற்ற கோ மஹாசம்மேளனத்தை குத்துவிளக்கேற்றி துவக்கி வைக்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.அவர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், முன்னாள் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு. சிவகுமார் அவர்கள், தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர்(திருப்பதி) திருமதி எஸ்.சதா பார்கவி, ஐ.ஏ.எஸ். மற்றும் உயர் அதிகாரிகள்





கோ மஹாசம்மேளனத்தில் பசுவிற்கு தீவனம் வழங்கும் காஞ்சி காமகோடி மடம் பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



31-10-2021 அன்று திருப்பதி மஹதி கலையரங்கில் நடைபெற்ற கோ மஹாசம்மேளனத்தில் உரை நிகழ்த்தும் தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட பீடாதிபதிகள் மற்றும் மடாதிபதிகளுடன் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.அவர்கள்



கோ மஹாசம்மேளத்தில் கலையரங்க வளாகத்தில் வாழை தாரை பார்வையிடும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.அவர்கள்



31–10–2021 அன்று திருப்பதி மஹதி கலையரங்கில் நடைபெற்ற கோ மஹாசம்மேளனத்தில் பங்கு கொண்ட பீடாதிபதிகள் மற்றும் மடாதிபதிகளுடன் தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள், திருப்பதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள்





30-10-2021 அன்று திருப்பதி மஹதி கலையரங்கில் நடைபெற்ற கோ மஹாசம்மேளன கலையரங்க வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பசு ஆதார விவசாய பொருட்கள் கண்காட்சியை பார்வையிடும் தி.தி.தே.பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.அவர்கள் மற்றும் முன்னாள் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு. சிவகுமார் அவர்கள்



30-10-2021 அன்று திருப்பதி மஹதி கலையரங்கில் நடைபெற்ற கோ மஹாசம்மேளனத்தில் திரு.விஜயகுமார் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களுக்கு பசு ஆதார பொருட்களை அன்பளிப்பாக அளிக்கும் திருப்பதி இணைச் செயலாட்சித்தலைவர் திரு. வீரபிரம்ஹம் ஐ.ஏ.எஸ். அவர்கள்



30-10-2021 அன்று திருப்பதி மஹதி கலையரங்கில் நடைபெற்ற கோ மஹாசம்மேளன கலையரங்க வளாகத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த பசு ஆதார(பஞ்சகவ்ய) பொருட்கள் கண்காட்சியை பார்வையிடும் தி.தி.தே.பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் மற்றும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ்.அவர்கள்





# "கோ" மஹா சம்மேளனம்

– திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.

கோ ரக்ஷணே தர்ம ரக்ஷண எனும் தொனியில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் தலைமையின் கீழ் அக்டோபர் 30,31 ஆம் தேதிகளில் திருப்பதி மஹதி கலையரங்கில் கோவிந்தன் சாட்சியாக "கோ மஹா சம்மேளனம்" நிகழ்ச்சி நா பூதோ நபவிஷ்யதி எனும் முறையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. யுக துளசி பௌண்டேஷன் மற்றும் ஸ்ரீகோதாம் பத் மேட, ராஜஸ்தான் சௌஜன்யம் இணைந்து நடத்திய இந்த கோ மஹா சம்மேளனத்திற்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வருகை புரிந்த ஜகத்குருக்கள், பீடாதிபதிகள், மடாதிபதிகள், ஸ்வாமிகள் முன்னிலையில் நடைபெற்ற கோ மஹாசம்மேளனம் பசு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு வழிவகை செய்யப்பட்டது.

முதல் நாள் சேவ் பௌண்டேஷன் தலைவர், பசு ஆதார விவசாய மகரிஷி ஸ்ரீவிஜய்ராம் தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளும் பசு ஆதார விவசாயம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. திருமலை திருப்பதி தேவஸ்தான பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இந்நிகழ்ச்சியில் இரு தெலுங்கு மாநிலங்களிலும் பசுவின் ஆதார விவசாயம் செய்யும் விவசாயிகள், விவசாய நிபுணர்கள் தம் அனுபவங் களையும், ஆலோசனைகளையும் வழங்கினர். முதலில் மஹதி கலையரங்கம் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திற்கும் மேற்பட்ட பசு ஆதார விவசாய உற்பத்தி கண்காட்சி கூடங்களை தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் துவக்கி வைத்தார்.







முழுமையான பாரம்பரிய முறையில் பசு ஆதார விவசாயம் மூலம் பயிரிடப்பட்ட பல விவசாய உற்பத்தி பொருட்கள், பசுவின் பஞ்ச கவ்யம் மூலம் செய்யப் பட்டவைகள் கண்காட்சியில் பார்வைக்கு வைத்திருந்தனர்.

முதலில் இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து உரையாற்றிய தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் பசு ஆதார விவசாயத்தினை தி.தி.தே. பெரியளவில் வரவேற்கிறது என்றும், கோயிலுக்கு ஒரு கோமாதா, பசு ஆதார நைவேத்தியம், நவநீத சேவை என பல புதுமையான சேவைகளுடன் தி.தி.தே. பசு பாதுகாப்பிற்கும் முயற்சி செய்கின்றது என்றும் கூறினார். பசு ஆதார விவசாயம் மூலம் செய்யப்பட்டவற்றையே திருவேங்கடமுடையான் நைவேத்தியத்திற்கு உபயோகப்படுத்துவோம் என்றும், பசு ஆதார விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்வதோடு மட்டுமின்றி சந்தை விலையை விட கூடுதல் விலை கொடுத்து விவசாய உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்கிறோம் என்றும் திரு. ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள் விவசாயிகளிடம் அறிவித்தார். தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ்.ஜவகர் ரெட்டி அவர்கள் பேசுகையில் பசு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்கு தி.தி.தே. மேற்கொண்டு உள்ள நடவடிக்கைகளை விவரித்தார். சிறப்பு விருந்தினராக வருகை புரிந்திருந்த மாதா நிர்மலானந்த யோகபாரதி அவர்கள் பசு பாதுகாப்பின் அவசியத்தை விவரித்தார். இரு தெலுங்கு மாநிலத்திலிருந்தும் வந்திருந்த நன்கொடையாளர்கள் பசு ஆதார விவசாயம் குறித்து தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். சேவ் பௌண்டேஷன் தலைவர் திரு. விஜயராம் அவர்களோடு பல புகழ் பெற்ற விவசாய தொழில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள் பசு ஆதார விவசாய கொள்கைகளையும் தொழில் நுட்பங்களையும் விவசாயிகளுக்கு விவரித்தனர்.



கஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் முக்கிய விருந்தினராக பங்கேற்று பல மகான்கள் முன்னிலையில் கோ மஹா சம்மேளனம் இரண்டாம் நாள் நிறைவு கூட்டம் அக்டோபர் 31 ஆம் தேதி மாலை துவங்கியது.



தி.தி.தே. பொறுப் பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள் உரையாற்றும் போது தெலுங்கு மாநிலங் களில் உள்ள கோசாலை களை ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷண சாலையுடன் இணைத்து பசுக்களின் உணவுகளுக்கான நிதி உதவி செய்யப்படும் என்று கூறினார்.

தி.தி.தே. கோ சம்மேளனம் இது ஆரம்பம் மட்டுமே என்றும், வரும் நாட்களில் மாவட்டங்கள் தோறும் இது போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவோம் என்றும் கூறினார். தி.தி.தே. செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ்.ஜவஹர் ரெட்டி அவர்கள் உரை யாற்றும் போது தெலுங்கு மாநிலங்களில் 600 க்கும் மேற்பட்ட கோசாலைகளை வளர்ச்சியடைய செய்வதற்கு வழிவகுப்போம் என்றார். பசு ஆதார விவசாயமே உலகத்திற்கு தீர்வு என தீர்மானம் செய்து ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்புதல் வேண்டும் என திருப்பதி சட்டசபை உறுப்பினர் திரு.பூமன கருணாகர ரெட்டி அவர்கள் கூறினார். இயற்கை விவசாயத்தினால் தான் உலகின் உணவு பிரச்சனையை தீர்க்க முடியும் என்று ஒய்வு பெற்ற திரு. விஜய் குமார் இ.ஆ.ப., அவர்கள் கூறினார். பசுவின் தனித்துவங் களை தெரியப்படுத்தும் விதமாக ஜொன்னவித்துல ராம லிங்கேஸ் வரராவ் இயற்றிய கோமாதா பாடலை பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் மற்றும் செயலாட்சித் தலைவர் வெளியிட்டனர்.

யுக துளசி பௌண்டேசன் தலைவர், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவின் முன்னாள் உறுப்பினர் திரு.கே.சிவகுமார் உரையாற்றும் போது பசுவினை பாதுகாத்த கோவிந்தனின் வழியில் தி.தி.தே. பசுவின் சிறப்புகளை உலகளவில் பரப்பும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதற்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். கோயிலுக்கொரு கோமாதா, கோ ஆதார நைவேத்தியம், நவநீத சேவை போன்ற சேவைகளை செய்வதோடன்றி பசுவை தேசிய விலங்காக அறிவிக்க வேண்டுமென்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தையும் தி.தி.தே. மேற்கொண்டுள்ளது என திரு. சிவகுமார் அவர்கள் நினைவு கூர்ந்தார். கோ மஹா சம்மேளனமும் நா பூதோ நபவிஸ்யதி எனும்படி நிகழ்த்திய தி.தி.தே. விற்கு நன்றியை தெரிவித்தார். பசுவை தேசிய விலங்காக அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் கோரிக்கை வைத்து பொங்கல் தினத்திற்குப் பிறகு நாடு முழுவதிலும் கோ மஹாரத யாத்தி ரையை






முன்னெடுப்போம் என்றும் திரு.சிவகுமார் அவர்கள் தெரிவித்தார்.

தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவினால் முன்மொழியப்பட்டபடி பசுவை தேசிய விலங்காக அறிவிக்க வேண்டுமென பிரபலமான யோகா குரு மற்றும் பதஞ்சலி யோகாபீடம் நிறுவனர் திரு. பாபாராம் தேவ் அவர்கள் மத்தியரசிற்கு கோரிக்கை வைத்தார். நாட்டின் அனைத்து முதல்வர்களும் தி.தி.தே. முன்மொழிந்ததனை சட்ட வடிவமாக்க ஒத்துழைத்தல் வேண்டுமெனக் கூறினார். புவனேஸ்வரி பீடம் பீடாதிபதி ஸ்ரீகமலாநந்த பாரதிஸ்வாமிகள், உடுப்பி பெஜாவர் அதோக்ஷஜா மடம் பீடாதிபதி ஸ்ரீவிஸ்வ பிரசன்ன தீர்த்த மஹாஸ்வாமிகள், உத்தரகாண்ட் ஸ்ரீகோபால் மணி மஹாராஜ், ஒடிசா ஸ்ரீபரமஹம்ச ப்ரஜ்ஞானந்த மஹாராஜ், ராஜஸ்தானைச் சேர்ந்த ஸ்ரீராதா கிருஷ்ணன்ஜீ மஹாராஜ், ஸ்ரீகோதம் மஹாதீர்ட்பத் மேட ராஜஸ்தான் கௌருஷி ஸ்ரீதத் சரணாநந்த மஹாராஜ் முதலானோர் பசுவை குறித்து தங்கள் கருத்துக்களைக் கூறினர்.

அவதூத தத்தபீடம் உத்ராதிகாரி பூஜ்ய ஸ்ரீ தத்த விஜயா நந்த தீர்த ஸ்வாமிகள், கர்நாடக ஸ்ரீயதுகிரி யதிராஜ நாராயண இராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்ரீஸ்ரீஸ்ரீ ராகவேஸ்வர பாரதீ மஹா ஸ்வாமிகள், ஏற்பேடு வியாசாஸ்ரமம் ஸ்ரீபரிபூர்ணா நந்தகிரி ஸ்வாமிகள் தங்களுடைய அருள் உரைகளை வழங்கினர். பசு பாதுகாப்பிற்காக தி.தி.தே. துவங்கியுள்ள போரானது உலகளவில் இருத்தல் வேண்டும் என முக்கிய விருந்தினரான கஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் கூறினார். பசு பராமரிப்பு நாட்டின் நலத்திற்கும் உபயோகமாக அமைகின்றது என ஜகத்குரு தெரியப்படுத்தினார். ச்ருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீவிதுசேகர பாரதி ஸ்வாமிகள் அனுப்பிய வீடியோ உரையாடலை பிரசுரித்தனர்.

நிகழ்ச்சிக்கு முன்னதாக ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் துவக்கிய கோதூளி நிகழ்ச்சியும், கபில பசுவிற்கும், கன்றுக்கும் சிறப்பு









வழிபாடு செய்தார். கலையரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சப்த பசு இனங்களின் காட்சியானது வரையறுக்க முடியாத ஆனந்த அனுபவத்தை அளித்தது. வடக்கு தெற்கு இந்திய தேசசங்கமமாக நடைபெற்ற கோ மஹா சம்மேளனத்திற்கு வந்திருந்த மகான்களை தி.தி.தே. சிறப்பாக கௌரவித்தது.

ஸ்ரீமஹாவிஷ்ணு திருவைகுண்டத்திலிருந்து மஹாலக்ஷ்மி தாயாரை தேடிக்கொண்டு சேஷாசலத்தை வந்தடைந்தார். அலைந்து திரிந்து சோர்வுற்ற எம்பெருமான் களைபாறிக் கொண்டிருந்த பொழுது அவருடைய பசியை அறிந்து கோமாதாவான பசு, பெருமாளுக்கு தானாகவே பால் சொரிந்து பசியை ஆற்றியது. பெருமாளுக்கு எத்தனை நாமங்கள் இருந்தாலும் "கோவிந்தா" என்ற நாமத்தாலே திருவேங்கடவனை அழைப்பது நாம் எல்லோரும் அறிந்ததே.



அவ்வாறு திருவேங்கடவனுடன் தொடர்ப்புடைய பசு பராமரிப்பு மற்றும் அதன் பாதுகாப்பிற்காக தி.தி.தே. இதுபோன்ற நிகழ்ச்சிகளை மேன்மேலும் செய்து வெற்றிபெறல் வேண்டுமென்றும், அனைத்து தேவதைகளின் வடிவமான பசு கூடுமானவரையில் விரைவாக தேசிய அந்தஸ்தை அடைய வேண்டுமென அந்த கோவிந்தனின் திருப்பாதங்களை சரணடைந்து பிரார்த்தனை செய்வோம்.



ஜெய் கோமாதா ஜெய் கோவிந்தா

# திருப்பாவையில் திருநாம சிறப்புகள்

ஆண்டாள் பூமாதேவியின் அம்சம். உலகம் உய்வு பெற அவள் அருளிய பிரபந்தங்கள் இரண்டு. 1) திருப்பாவை, 2) நாச்சியார் திருமொழி.

வராக அவதாரத்தில், வராகப் பெருமாள், பூமா தேவியை மடியில் அமர்த்திக் கொண்டு, உலக உயிர்கள் எளிமையான முறையில் வழிபட்டு, இறைவனை அடைய சில வழிகளை உபதேசம் செய்தார்.

அதில் ஒன்றுதான் "திருநாம சங்கீர்த்தனம்".

பற்பல யாகங்களைச் செய்வதால், அடைய முடியாத பலன்களை,திருநாம சங்கீர்த்தனம் எளிதாகத் தந்து விடுகிறது.

இன்னும் சொல்லப் போனால், பகவத் பிரபாவத்தை விட, பகவத் நாம பிரபாவம் வலிமை யானது.

அவனே கைவிட்டாலும், காலம் தாழ்ந்தாலும் அவன் திருநாமம் கை விடாது.

"திரௌபதியின் ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே" என்பது ரகசிய நூல்களில் உள்ள சாரமான கருத்து.

"சதுர் யுகங்களில்" ஒவ்வொரு யுகத்துக்கும் ஒரு பெருமை.

கிருத யுகம் – தவம், திரேதா யுகம் – யாகம், துவாபர யுகம் – பாத சேவை, கலி யுகம் – நாம சங்கீர்த்தனம். கலியுகத்திற்கு உகந்தது நாம தர்மமே.

*"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே*
*தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே*
*ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே இம்மையே*
*"ராம" என்ற இரண்டு எழுத்தினால்".*

பகவான் திருநாமச் சிறப்பைச் சொல்வதற்காகவே ஆண்டாள் எழுதிய பிரபந்தம் தான் திருப்பாவை. திருப்பாவையில், பகவத் திருநாமத்தின் உட்கருத்துகள், வேதசார நுட்பங்களாக மலிந்து கிடப்பதைக் கருதியே, உரையாசிரியர்களும், பாகவதர்களும் திருப்பாவையை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். அதன் பெருமையை இப்படிச் சொல்கிறது ஒரு பாடல்.



*"பாதகங்கள் தீர்க்கும், பரமன் அடி காட்டும்,*
*வேதம் அனைத்துக்கும் வித்தாகும்,*
*கோதை தமிழ், ஐயைந்தும் ஐந்தும்*
*அறியாத மானிடரை,*
*வையம் சுமப்பதும் வம்பு".*

திருப்பாவை 30 பாசுரங்களின் தொகுப்பு நூல்.

30 பாசுரங்களிலும், பகவான் திருநாம வைபவம் பேசப்படுகிறது.

மகாபாரதத்தில் பீஷ்மாச்சாரியார் பகவானின் அத்தனை சிறப்பையும் நாம பிரபாவமாக்கிப் பாடியதுதான் விஷ்ணு சஹஸ்ர நாமம்.

*"நின்னிலும் நல்லது நின் திருநாமம்"* என்பார்கள். திருநாமம் என்பதிலுள்ள

*"குலம் தரும், செல்வம் தந்திடும் அடியார் படு துயர் ஆயின எல்லாம்*
*நிலம் தரம் செய்யும், நீள் விசும்பு அருளும், அருளொடு பெரு நிலம் அளிக்கும்,*
*வலம் தரும், மற்றும் தந்திடும், பெற்ற தாயினும் ஆயின செய்யும்,*
*நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம்"*



பெரிய திருமொழியின் விரிவு "நாராயணா" என்னும் திருநாமச் சிறப்பின் பன்முகப் பரிமாணம் என்று சொல்லலாம். இதை, ஒரே வரியில் மிக அழுத்தமாகச் சொல்கிறார் ஆண்டாள்.

*"நாராயணனே நமக்கே பறை தருவான்"* இதில் உள்ள ஏகாரம் முக்கியம்.

அவனைத் தவிர வேறு யாரும் நமக்கு தர முடியாது. நம்மைத் தவிர வேறு யாரும் அவனிடம் பெற முடியாது.கொள்வதற்கும் கொடுப்பதற்கும் நாமும் அவனுமாகவே இருக்கிறோம்.

இப்போது நாராயணன் தருவானா? நாராயண நாமம் தருமா? என்கிற கேள்வி எழுகிறது.

இதற்கு இரண்டு உதாரணங்கள்.ஒன்று கட்டிப் பொன். இன்னொன்று ஆபரணப் பொன். கட்டிப் பொன் பெருமாள். ஆபரணப் பொன் பெருமாளின் திருநாமம். உடனடியாகப் பயன்படுத்தலாம். கட்டிப் பொன்னை உடனடியாகப் பயன்படுத்த முடியாது. அதை ஆபரணப் பொன்னாக மாற்றித் தான் பயன்படுத்த முடியும்.

ஆனால், கட்டிப் பொன்னில் இருந்து தான், ஆபரணப் பொன் கிடைக்கும் என்பதையும் மறந்து விடக்கூடாது. திருமங்கையாழ்வார், *"நான் கண்டு கொண்டேன் நாராயணா"* என்று கட்டிப் பொன்னைச் சொல்லாமல், "நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று ஆபரணப் பொன்னைச் சொல்கிறார்.

திருப்பாவையில் "நாராயணன்" என்கிற சொல்லுக்கு "நாராயணன் என்னும் திருநாமம் என்று கூடச் சிந்திக்கலாம்.

"திரு" மகாலட்சுமியைக் குறிக்கும். ஒவ்வொரு திருநாமத்திலும் மகாலட்சுமித் தாயாரின் சாந்நித்தியம் ஒளிந்து இருக்கிறது.

எனவே, பகவானின் திருநாமத்தைச் சொன்னால், பகவதியின் பூரணமான திருநாமங்களையும் சேர்த்துச் சொன்னதாக ஆகிவிடும்.


திருப்பாவையின் நிறைவுப் பகுதியில் *"வங்கக் கடல் கடைந்த மாதவனை"* என்று, பிராட்டியான திருமகளோடு கூடிய பரம்பொருளை வணங்க வேண்டும் என்பதைக் காட்டித் தருகிறார். ஆண்டாள் திருநாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்யவே ஒரு பாசுரத்தை அருளிச் செய்திருக்கிறாள்.

*அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி*
*பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி*
*கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி*
*குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி*
*வென்று பகைகெடுக்கும் நின் கையில் வேல் போற்றி*
*என்றுஎன்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வாய்*
*இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்*

திருநாமத்தைப் பாடுகின்ற போது கிடைக்கும் இன்பம், பலன், திருநாமம் அடுக்கி பாடும் அருஞ் சிறப்பு கொண்டிருப்பதால் திருப்பாவையை "வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதைத் தமிழ்" என்று வைணவ பெரியவர்கள் ஒரே குரலில் சொன்னார்கள்.

திருப்பாவையின் ஒவ்வொரு பாடலிலும் இறை நாமத் தத்துவமே எதிரொலிக்கிறது. திருப்பாவையில், ஆண்டாள் பாடாத திருநாமங்களே இல்லை என்று சொல்லலாம்.பிரதானமான அத்தனைத் திருநாமங்களின் சிறப்பை யும் பாடியிருக்கிறார்.

1) ''நின்னிலும் நல்லது நின் திருநாமம்'' (திருப்பாவை 2)
2) ''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி'' (திருப்பாவை 3)
3) 'தாமோதரனை, வாயினால் பாடி'' (5)
4) 'அரி என்ற பேரரவம்'' (6)
5) "கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ'' (7)
6) ''பாவாய், எழுந்திராய், பாடிப் பறைகொண்டு மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதி தேவன்'' (8)
7) ''மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றென்று நாமம் பலவும்'' (9)
8) ''நாற்றத் துழாய்முடி நாராயணன்'' (10)
9. ''முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட'' (11)
10. ''தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கு இனியான்'' (12)
11. ''புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமைப் பாடிப்'' (13)
12. ''பங்கயக் கண்ணானைப் பாடேலோர் எம்பாவாய்'' (14)
13. ''வல்லானைக் கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாடு'' (15)
14. ''தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்'' (16)
15. ''பந்தார் விரலி உன் மைத்துனன் பேர்பாட'' (18)
16. ''கலியே, செப்பம் உடையாய், திறல் உடையாய், விமலா'' (20)
17. ''ஊற்றம் உடையாய், பெரியாய், உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே'' (21)
18. ''திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி''(25)
19. ''கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா'' (27)
20. ''குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா'' (28)
21. ''இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா'' (29)
22. ''மாதவனை, கேசவனை'' (30)





திருப்பாவையில் ஒரே ஒரு பாசுரத்தைப் பாடினாலும் போதும். அதனால் நமக்குக் கிடைக்கக் கூடிய பலன்கள் ஏராளம்.

1) ஆண்டாளின் திருவருள், 2) எம்பெருமானின் திருவருள், 3) பிராட்டியாகிய மகாலட்சுமித் தாயார் திருவருள், 4) இதை உலகுக்கு எடுத்துக்காட்டிய இராமானுஜரின் திருவருள், 5) இதன் பெருமையை உலகிற்கு சொன்ன வைணவ ஆசாரியர்களின் திருவருள், 6) இதை தினசரி திருவாராதனத்தின்போது சேவிக்கும் பரம பாகவதர்களின் திருவருள் என்று அறு(6) பெரும் அருள்கள் கிடைப்பதால் அருவினை அறுபடும்.



மூன்று பாடல்களில் கோவிந்த நாமத்தின் சிறப்பைப் பாடுகிறாள். மலையப்ப ஸ்வாமிக்கு கோவிந்தன் என்றே பெயர். ஆண்டாள் கோவிந்த நாமத்தை பெரும் பேர் என்று போற்றுகிறாள். மற்ற திருநாமங்கள் கோவிந்த நாமத்தை ஒப்பிடும் போது சிறு பெயர்கள்.

வேதவேதாந்த நூல்களுக்கு உரை எழுதிய சுவாமி இராமாநுஜர் வாழ்க்கையின் உஜ்ஜீவனமாக திருப் பாவையைக் கை கொண்டார்.

பகவான் திருநாமமே ஜீவனமும் உஜ்ஜீவனமும் என்ற கருத்தை உலகினோர்க்கு அனுஷ்டித்துக் காட்டி தினசரி உஞ்ச விருத்தியின் போது திருப் பாவையின் பாசுரங்கள் பாடுவதையே வாழ்நாள் கடமையாகக் கொண்டவர். அதனால் இராமாநுஜருக்கு திருப்பாவை ஜீயர் என்று மற்றவர்கள் அழைக்கும் பேறு கிடைத்தது. அனைவருக்கும் அப்பேறு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே வைணவ வழிபாட்டு முறையில் (திருவாராதன க்ரமம்); திருப்பாவைப் பாசுரங்கள் பாடியே நிறைவு செய்ய வேண்டும் என்ற ஒரு விதியை ஏற்படுத்தினார்.

"சாற்றுப் பாசுரங்கள்" என்று காலை வழிபாட்டில் திருப்பாவையைச் சேவிக்கச் சொன்னார்கள். இப்படிப் பட்ட உயர்ந்த பகவத் திருநாமத்தை சொல்லும் திருப்பாவையை தினம் பாடுவோம். திருமகளோடு கூடிய திருமாலின் பேரருளைப் பெறுவோம்.

பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

## திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதியிலிருந்து கி.மீ.களில்

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் ...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி ...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்ளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயண வனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

# அஷ்டலக்ஷ்மி திருக்கோயில்

ஸ்ரீ லக்ஷ்மி திருமாலின் தேவி என்றாலும் அவர் செல்வத்தின் அதிபதியாக விளங்குவதால் அவருக்கு சிறப்பு பூஜை ஏற்பாடு செய்து வழிபடுகின்றனர். அவளது அனுக்ரகம் அனுதினமும் கிடைக்க வேண்டும் என்பதற்காக மனிதர்கள் வசிக்கும் இல்லங்களின் வாசல்களில் மட்டுமின்றி இறைவன் உறையும் சைவ–வைணவ ஆலய வாசல்களிலும் லக்ஷ்மிதேவியின் திருவுருவத்தை வைப்பதை வழக்கமாக்கியுள்ளனர்.

## செல்வத்தை அருளும் லக்ஷ்மிதேவி:

ஒருவர் வாழ்வதற்கு அருளும் பொருளும் தேவை. அத்தகைய அருளையும் பொருளையும் வழங்குபவள் ஸ்ரீலக்ஷ்மிதேவி. செல்வம் என்பது பணத்தை மட்டும் குறிப்பதன்று. கல்வி, நீண்ட ஆயுள், நிறைவான நண்பர்கள், அன்புக்குரிய வாழ்க்கைத் துணை, அறிவாற்றல் மிக்க குழந்தைகள், நோயற்ற வாழ்வு, எதற்கும் கலங்காத மனவுறுதி, சிக்கலில்லாத வாழ்க்கை, வாழத் தேவையான பொருள், அதற்காக உழைத்துப் பெறும் ஊதியம், மேன்மேலும் வளரக் கூடிய புகழ், மாறாத வார்த்தை, திறமையான குடும்ப நிர்வாகம், நமக்கு உதவக்கூடிய பெரு மக்களின் தொடர்பு, பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துதல் போன்ற பதினாறு பேறுகளை உள்ளடக்கியதாகும். இந்த செல்வங்களுக்கெல்லாம் அதிபதியாகத் திகழ்பவள் ஸ்ரீலக்ஷ்மிதேவி.

## அஷ்டலக்ஷ்மி வழிபாடு:

சிவபெருமானின் தேவியான உமையவள் பத்து அவதாரங்கள் எடுத்து தன் பக்தர்களுக்கு அருள்பாலித்தது போல, திருமாலின் தேவியான மகாலக்ஷ்மி எட்டு வடிவங்கள் எடுத்ததாக புராணங்களும் கூறுகின்றன. அந்த எட்டு வடிவங்களே ஐஸ்வர்யம் அருளும் அஷ்டலக்ஷ்மிகளாக போற்றி வழிபடப்படுகின்றன. அஷ்டலக்ஷ்மி வழிபாடு பற்றிய குறிப்புகள் பண்டைய நூல்கள் சிலவற்றில் இடம் பெற்றுள்ளது. வைணவ அறிஞர் முக்கூர் உ.வே. ஸ்ரீநிவாசவர தாச்சாரியார் இயற்றிய ஸ்ரீஅஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம் அஷ்டலக்ஷ்மிகளின் மகாத்மியத்தைக் கூறுகின்றது.

தென்னிந்தியாவில் வாழும் இந்துக்கள் குறிப்பாக வைணவர்கள் அஷ்டலக்ஷ்மி வழிபாட்டை முன்னெடுத்துச் செல்ல பலரும் இதை வழிபடத் துவங்கியதுடன், பெரும்பாலானவர்களால் பின்பற்றப் பட்டன. இதற்காக உருவாக்கப்பட்ட வழிபாட்டு நூல்கள் மற்றும் சமயத் துதிகள் அடிப்படையில் அஷ்டலக்ஷ்மி திருவுருவங்களை படமாக இல்லங்களிலும், பின்னர் ஆலயங்களிலும் வைத்து வழிபடத் தொடங்கினர். காலப்போக்கில் தனி ஆலயம் எழுப்பும் எண்ணம் தோன்றி ஆங்காங்கே பல ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய ஆலயங்களில் ஒன்றே தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வங்க கடற்கரையோரமாக பெசண்ட் நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீஅஷ்ட லக்ஷ்மி திருக்கோயில்.

## ஆலய தோற்றுவாய்:

இந்தியாவில் மும்பை மாநகரம் செல்வ செழிப்பு மிக்க மாநகரமாகும். அங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீமகாலக்ஷ்மி தாயாரின் அருளே இதற்கு காரணம் என்பது அங்கு வாழும் மக்களில் பெரும்பாலா

**நெய்வாசல் நெடுஞ்செழியன்,**
**சிதம்பரம். 94422 05862.**



னோரின் நம்பிக்கையாகும். நாராயணனின் உள்ளங் கவர்ந்தவளாகவும், மக்களின் மனங்கவர்ந்த வளுமாக அருள்பாலிக்கும் அந்த மகாலக்ஷ்மிக்கு சென்னையிலும் ஒரு திருக்கோயில் அமைக்க வேண் டும் என காஞ்சிபெரியவர் ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் நீண்டநாள் விருப்பமாகும். அவர் கனவில் தோன்றி தமக்கு ஒரு கோயில் ஏற்படுத்துமாறு தாயார் கூறியதன் பேரில் அவா கொண்ட மகாசுவாமிகள், 1974ஆம் ஆண்டில் இக்கோயிலின் திருப்பணியை தொடங்கிவைத்தார்.

அஷ்ட லக்ஷ்மி திருவுருவங்களை மூலவரின் அஷ்டாங்க விமானத்தில் அமைத்து. கருவறையில் மகாலக்ஷ்மி உடனுறை மகாவிஷ்ணு திருமணக் கோலத்தில் அருள்பாலிக்கும் விதமாகவும் எட்டு சன்னதிகளில் அஷ்ட லக்ஷ்மிகளும் அருள் பாலிக்கு மாறும் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. மகா பெரியவரின் ஆக்ஞையை ஏற்று கோவை லக்ஷ்மி மில்ஸ் நிறுவனம் அளித்த நன்கொடையைக் கொண்டு முக்கூர் ஸ்ரீநிவாச வரதாச்சாரியர் இத்திருப் பணியை ஒருங்கிணைத்தார். காஞ்சி பெரியவரால் தேர்வு செய்யப்பட்ட கற்களில் வடிக்கப்பட்ட மகா லக்ஷ்மி உடனுறை மகாவிஷ்ணு மற்றும் எட்டு லக்ஷ்மி களும் அகோபில மடத்தின் நாற்பத்து நான்காவது பட்டமான வேதாந்த தேசிக யதீந்திர மகாதேசிகன் சுவாமிகள் முன்னிலையில் நிறுவப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு, ராட்சச ஆண்டு பங்குனி மாதம் 23–ம் நாள் (5.4.1976) மகாசம்ப்ரோக்ஷணம் இனிதே நடைபெற்றது.

**தலச்சிறப்பு:**

கடற்கரைக்கு கிழக்கு நோக்கி கட்டப்பட்டுள்ள இவ்வாலயம் 45 அடி நீளமும், 45 அடி அகலமும் கொண்ட சதுர அமைப்பின் மீது 63 அடி உயரத்திற்கு நான்கு நிலைகளாகக் கட்டப்பட்டுள்ளது. அடிப்பீடம் மூன்றரை அடி உயரம் கொண்டது. இந்த நான்கு அடுக்குகளிலும் லக்ஷ்மியின் எட்டு வடிவங்களும் வெவ்வேறு நிலைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மூலவர் மகாலக்ஷ்மி உடனாகிய மகாவிஷ்ணு, பரிவாரத் தெய்வங்கள் பிற லக்ஷ்மிகளாகும். தீர்த்தம் சமுத்திர புஷ்கரணி (வங்கக் கடல்).

**ஆலயஅமைப்பு:**

நான்கு நிலைகளாக அமைந்துள்ள இவ்வால யத்தின் முதல் நிலையில் ஸ்ரீமகாவிஷ்ணு உடனுறை மகாலக்ஷ்மி திருமணக் கோலத்தில் அருள்பாலிக்கும் பிரதான சன்னதி அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். கருவறையின் முன்புறம் 24 தூண்களைக் கொண்ட மண்டபத்திற்குக் கிழக்கே புதிய சொற்பொழிவு மண்டபம் அமைக்கப் பட்டுள்ளது.

மகாலக்ஷ்மி சன்னதியை தரிசனம் செய்த பின்னர் பிரகாரத்தின் தெற்கில் ஸ்ரீஆதிலக்ஷ்மி, மேற்கில் ஸ்ரீதான்யலக்ஷ்மி, வடக்கில் ஸ்ரீதைரிய லக்ஷ்மிகளை தரிசிக்கலாம். இவர்களை தரிசித்து மேலேச் செல்ல அமைக்கப்பட்டுள்ள பதினெட்டு படிகள் வழியாக இரண்டாவது நிலைக்குச் செல்ல



















வேண்டும். இந்த பதினெட்டுப் படிகளும் 18 தத்துவங்களை உணர்த்துவதாகும். சிற்ப ஆகம சாஸ்திரப்படி இப்படிகள் 28 அங்குல அளவில் குறுகலாக அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாவது நிலையில் முதலில் கிழக்கு முகமாக அருள்பாலிக்கும் ஸ்ரீகஜ லக்ஷ்மியையும், தென்பகுதியில் ஸ்ரீசந்தான லக்ஷ்மியையும், மேற்கில் ஸ்ரீவிஜயலக்ஷ்மியையும், வடக்கில் ஸ்ரீவித்யாலக்ஷ்மியையும் வழிபடலாம்.

இரண்டாவது நிலையில் தென்கிழக்கு மூலையில் ஸ்ரீலக்ஷ்மி திருக்கல்யாணத் திருக்கோலமும், தென்மேற்கு மூலையில் ஸ்ரீவைகுண்டக் காட்சியும், வடமேற்கு மூலையில் ஸ்ரீஆதிசங்கரர், ஸ்ரீமத் ராமாநுஜர், ஸ்ரீமத்வாசாரியார் போன்ற ஞானிகளின் திருவுருவங்களும், கிழக்கில் தேவாசுரர்கள் அமிர்தம் பெற திருப்பாற்கடலை கடையும் எழிற்காட்சியும் சிற்பங்களாக வடிக்கப்பட்டு நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

மூன்றாவது நிலையில் ஒரு புறம் ஸ்ரீமகா விஷ்ணுவின் தசாவதார காட்சிகளும், ஸ்ரீஆதிசங்கரர் கனகதாரா ஸ்தோத்திரம் ஓதும் பிம்பமும், தூப்புல் ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனின் திருவுருவத்தையும் தரிசிக்கலாம். நான்காவது நிலையில் ஸ்ரீதனலக்ஷ்மி அருட்காட்சி தருகிறார். பிரதான கோயிலின் முன்புறமாக சங்கநிதி பதுமநிதி என இரண்டு பொக்கிஷங்களுக்கும் உரிய கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அஷ்டலக்ஷ்மிகளின் வடிவங்கள் எட்டும் சிற்ப சாஸ்திரப்படி நிறுவப்பட்டிருக்கிறது.

மாவிளக்கு ஏற்றும் மகாலக்ஷ்மி: ஒவ்வொரு ஆலயத்திலும் ஒவ்வொரு நிகழ்வு பிரசித்தமாகும். அதனடிப்படையில் ஒவ்வொரு மாத ஏகாதசி, திருவோண நட்சத்திரத்தன்று சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்படுவதுடன், புரட்டாசி நவராத்திரி திருவிழா 10 நாட்கள் விதவிதமான அலங்காரங்களுடன் திருவிழா நடைபெறுகிறது.


இவைத்தவிர தீபாவளி, லக்ஷ்மிபூஜை, ஆடி மற்றும் தை வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு பூஜைகளும் நடைபெறுகின்றன. அந்நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வழிபட வருவர். புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமை தோறும் மாவிளக்கேற்றும் மகாதீபாராதனை பூஜை நடைபெறுகிறது.

பொதுவாக புரட்டாசி மாதம் விஷ்ணு வழிபாட்டிற்குரிய மாதமாகும். குறிப்பாக புரட்டாசியில் வரும் சனிக்கிழமைகள் மிகமிகச் சிறப்பு வாய்ந்தவை. அதிலும் மூன்றாம் சனிக்கிழமை உத்தமமானது என்பதால் இந்நாளன்று பெருமாள் கோயில்கள் நிரம்பி வழிகின்றன. திருமலைக்குச் சென்றால் சுவாமியை தரிசிக்கவே முடியாதபடி பெருங்கூட்டம் அலை மோதும். இந்நாளில் மாவிளக்கேற்றி பெருமாளையும் தாயாரையும் மனமுருகி

# ஆலய அமைவிடம்



**அஷ்டலக்ஷ்மி கோயில் சென்னை மாநகரத்தில் அடையாறு பெசண்ட் நகர் பகுதியில் எலியட்ஸ் கடற்கரையின் இறுதியில் அமைந்துள்ளது. ஆலய முகவரி: அருள்மிகு அஷ்டலக்ஷ்மி திருக்கோயில், பெசண்ட் நகர், சென்னை 600 090. ஆலய திறப்பு நேரம்: காலை மணி 7.00 முதல் 12.00 வரை, மாலை மணி 4.00 முதல் இரவு 8.30 வரை.**




வழிபட நம்மைச் சூழ்ந்த கஷ்டங்கள் விலகி சகல சௌபாக்கியங்களும் வந்து சேரும் என்பது ஐதீகம்.

இதற்கு முன்னுதாரணமாக மகாலக்ஷ்மியே ஒரு கட்டத்தில் மா விளக்கேற்றி மாதவனை வழிபட்டு இருக்கிறாள். அதன்படி இவ்வாலயத்தில் மூன்றாவது சனிக்கிழமை அன்னை மகாலக்ஷ்மிக்கு மாவிளக்கு ஏற்றி வழிபடும் வைபவம் நடைபெறுகிறது. வழக்கம் போல தினசரி பூஜைகள் முடிந்த பின்னர் சுமார் 9. 00 மணிக்குமேல் உற்சவ மூர்த்தியாக உள்ள ஸ்ரீநிவாச பெருமாள் முன்பு அன்னக்கூட உற்சவம் நடைபெறும்.

அதன்பின்னர் இங்குள்ள அஷ்டலக்ஷ்மிகளின் சன்னதிகளில் ஒரு மாவிளக்கு என்று எட்டு சன்னதிகளிலும் எட்டு மாவிளக்குகள் ஏற்றப்படுகின்றன. அவற்றை அன்னை மகாலக்ஷ்மியே ஏற்றுவதாக ஐதீகம். பிறகு அவை அனைத்தும் ஒவ்வொன்றாக உற்சவர் ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதிக்கு கொண்டு செல்லப்பட்டு அந்த எட்டு மாவிளக்கின் தீப சுடர்களையும் கொண்டு பெருமானின் முன்பாக ஒரு அகண்ட தீபம் ஏற்றப்படுகிறது. மாலை சுமார் 5 மணியளவில் சகஸ்ரநாம அகண்ட பாராயணமும், பூஜைகளும், நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்கள் பாடி பகவானை சேவித்தலும் விமரிசையாக நடைபெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்த ஆராதனை விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு பெருமாளின் அருளைப் பெறுகின்றனர்.

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 64க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | த | க் | ஸு | 1 ஸ்ரீ | ஸ் | த | வ | ம் | ல | ம | 2 க |
| ன | தா | ந் | 3 ச | வ | ல் | 4 வி | ணி | ய | ரா | 5 நா | |
| ம் | ட | ரா | 6 தி | த் | 7 உ | க | 8 அ | லை | ம | க | ள் |
| | ஷ் | | ரு | ஸ | | ர் | ர | நி | தை | 9 கோ | |
| | 10 அ | | ம | ம் | | 11 பா | வி | தி | து | 12 ஸ் | 13 ஸ்ரீ |
| கி | ய | நா | க | ங் | 14 ரெ | ஞ் | ந் | ந் | லி | ரே | 15 கா |
| 16 யா | னை | ளி | ள் | 17 வெ | | ச | தை | 18 சா | ல் | யா | ர் |
| ர் | ய | 19 தா | கு | ரு | 20 பி | ரா | ட் | டி | வ | | த் |
| வ | ஜ | 22 மா | த | வி | | 25 த் | | | ல | | தி |
| ஸ் | 24 வி | | கி | ன | 26 ஜா | ர | | 27 பூ | ம | ங் | கை |
| 28 ஜ | | மி | சு | ட் | ல | ஹா | 29 ம | ங் | 30 க | ள | ம் |
| | வி | தே | 23 பூ | | | | ணி | ரி | 21 ஹ | | |

# இதிகாசங்கள் காட்டும் பிராட்டியின் சீர்மை



– திரு. எஸ். துரை, காஞ்சிபுரம், 9486139685.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஐந்து விதமான வடிவங்களில் எழுந்தருளியிருக்கிறார். பரமபதமாகிய ஸ்ரீவைகுந்தத்தில் பரம் என்ற வடிவத்திலும், திருப்பாற்கடலில் ஸ்ரீஆதிசேஷன் மீது பள்ளிக்கொண்டு வியூகம் என்ற வடிவத்திலும், தேவர்களையும் மனிதர்களையும் காக்க எடுத்த பல்வேறு அவதாரங்களில் விபவம் என்ற வடிவத்திலும், பக்தர்களின் உள்ளங்களை கவரும் விதமாக பூவுலகிலுள்ள கோயில்களில் அர்ச்சை என்ற சிலை வடிவத்திலும், அனைத்துப் படைப்புகளிலும் உடல்மிசை உயிரெனக்கரந்து எங்கும் பரந்திருக்கும் தன்மையை உணர்த்தும் விதமாக அந்தர்யாமி என்ற வடிவத்திலும் அருள்பாலிக்கிறார். இந்த ஐந்து விதமான வடிவங்களிலும் எம்பெருமானின் திவ்ய மகிஷியாகிய ஸ்ரீமகாலக்ஷ்மி தாயார் அவரை ஒரு போதும் பிரியாமல் உடனுறைந்தே அருள் புரிகிறார்.




அதேசமயம், எம்பெருமானின் மூன்றாவது வடிவமாகிய, விபவ அவதாரங்களில் பூரண அவதாரமாக போற்றப்படும் ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் அவதார சமயங்களில் ஸ்ரீமகாலக்ஷ்மி தாயாரும் முறையே ஸ்ரீசீதா பிராட்டியாகவும், ஸ்ரீருக்மணி பிராட்டியாகவும் மானுட குலத்தில் அவதரித்து அவரது அவதார நோக்கம் நிறைவுப்பெற உதவியதுடன், எம்பெருமானின் சீற்றத்திற்கு உள்ளானவர்களையும் தன்னுடைய இன்னருளால் காத்து நின்றுள்ளார்.

ஸ்ரீமத்ராமாயணம் என்னும் இதிகாசம் முழுக்க முழுக்க ஸ்ரீராமாவதார சரித்திரத்தைப் பேசும். அதேசமயம் ஸ்ரீமஹாபாரதம் என்னும் இதிகாசம், பெரும்பகுதி பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களின் கதையையும், அதனூடே ஸ்ரீகிருஷ்ணாவதார சரித்திரத்தையும் பகர்வதாக அமைந்துள்ளது. ஸ்ரீமகாபாரதத்தை இயற்றிய ஸ்ரீவியாச பகவானோ எம்பெருமானின் பல்வேறு அவதார சிறப்புக்களையும் கூறுகின்ற ஸ்ரீமத்பாகவதம் என்னும் புராணத்தையும் இயற்றினார். இப்

புராணத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் சரித்திரம் விசேஷமாகக் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீராமாவதாரத்தைப் பொறுத்தவரையில் சீதா பிராட்டியாக அவதரித்த ஸ்ரீமகாலக்ஷ்மி தாயார் பொறுமை, மன்னிப்பு ஆகியவற்றின் மறு உருவ மாகவே உலா வருகின்றார். வனவாசத்தில் ஒருநாள் தன்னுடைய திருமேனியைத் தீண்டிய காகசுரனை யும், பெரும் கருணைக் கொண்டு மன்னித்தார்.

வனத்தில் தவம் செய்யும் தங்களை இம்சிக்கும் இராவணன் உள்ளிட்ட ராட்சசர்களிடமிருந்து காத்தருள வேண்டும் என்று பல்வேறு ரிஷிகளும் வேண்டுகோள் விடுத்தபோது அவர்களுக்கு அபயம் அளித்த ஸ்ரீராமபிரான், அவ்வாறு துன்புறுத்தும் ராட்சசர்கள் அனைவரையும் கொல்வதாக சபதம் செய்கிறார். ஆனால் சீதாபிராட்டியோ, நமக்கு நேரடியாக எந்த துன்பமும் செய்யாத ராட்சசர்களைக் கொல்ல வேண்டாம் என்று ஸ்ரீராமபிரானிடம் கூறுவதன் மூலம் தனது எல்லையற்ற கருணையை நிலை நாட்டுகிறார். இவ்வளவு ஏன்? ஸ்ரீராமபிரான் இராவணனை வதம் செய்தபிறகு அசோக வனத்தி லுள்ள சீதாபிராட்டியை அவரிடம் அழைத்து வருவ தற்காக ஆஞ்சநேயர் சென்றார்.





அதற்கு முன்பே ஸ்ரீராமரின் கட்டளைக்கிணங்க பிராட்டியைத் தேடி இலங்கைக்கு வந்த ஆஞ்சநேயர் இலங்கையை சேர்ந்த சில ராட்சசிகள் அவரை சுற்றி சூழ்ந்து கடுமையாகப் பேசியதை நேரில் கண்டத னால், அவ்வரக்கிகளை கொல்வதற்கு உத்தரவிடு மாறு பிராட்டியிடம் விண்ணப்பித்தார். அதனை மறுத்த பிராட்டி ஆஞ்சனேயா, ராட்சசிகள் அவர் களுக்கு இடப்பட்ட கட்டளையைத் தான் அவர்கள் நிறைவேற்றினார்கள். அதனால் அவர்களிடம் எனக்கு யாதொரு வருத்தமுமில்லை. இவர்களை நீ கொல்லக் கூடாது என்று கூறி தன்னிடம் அபயம் கேட்காத அரக்கிகளுக்கும் அபயமளித்தார்.

ஹே ராமா! உனக்கு நேரடியாக தீங்கு எதுவும் செய்யாத என்னை க்ஷத்திரிய தருமத்திற்கு விரோதமாக மறைந்திருந்து அம்பை எய்திக் கொன்றாயே! உன்னுடைய உயிர் போன்ற பிராட்டி உன்னுடன் இல்லாததால்தான் இவ்வாறு நெறி பிறழ்ந்து நடக்கிறாய் போலும் என்று உயிர் பிரியுமுன் வாலி சொன்னது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

**கோஇயல்தருமம் உங்கள் குலத்துதித்தோர் கட்குஎல்லாம்**
**ஓவியத்தெழுத வொண்ணா உருவத்தாய் உடைமையன்றோ**

ஆவியை சனகன் பெற்ற அன்னத்தை
அமிழ்தின்வந்த
தேவியை பிரிந்தபின்னர் திகைத்தனை போலும்
செய்கை?

என்ற கம்பராமாயண பாசுரம் சீதா பிராட்டி யாரின் அனுக்கிரக விசேஷத்தைப் பரக்கக் கூறுவது டன் பிராட்டியுடன் கூடிய ஸ்ரீமந் நாராயணனையே நாம் வழிபட்டு சரணடைதல் வேண்டும் என்ற முக்கியமான ஸ்ரீவைணவக் கொள்கையின் விளக்க மாகவும் அமைந்திருக்கிறது.

மேலும் ஜனகமகாராஜர் தம்முடைய திருமகளாகிய ஸ்ரீசீதாபிராட்டியாரை கன்னிகாதானம் செய்துவைத்தபோது, என்னுடைய மகளாகிய இந்த சீதை உன்னுடைய அறங்களை நீ செவ்வனே கடைபிடிக்க துணையாக இருப்பாள் என்று கூறி பாணிக்கிரகணம் செய்து வைத்தார்.

தாம் ஒரு தெய்வீக அவதாரபுருஷர் என்பதை சற்றும் நினையாமல் தம்மை ஒரு மானுடப் பிறவியாகவே எண்ணி தாம் சந்தித்த ரிஷிகள் உள்ளிட்ட பெரியவர்கள் அனைவரையும் வணங்கி நின்றார் ஸ்ரீராமபிரான். சீதாபிராட்டியார் மாமனார் தசரதர், மாமியார்கள் கௌசல்யாதேவி, சுமித்ராதேவி, கைகேயி ஆகியோர்களை பணிந்து வணங்கியதுடன் வனவாசத்தின்போது அத்ரி மகரிஷியின் தர்மபத்தினியாகிய அனுசுயாதேவி கூறிய அறிவுரைகள் அனைத்தையும் பரிவுடன் ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் (ஜனகர் கூறிய படி) ஸ்ரீராமபிரான் அனுசரித்து வந்த முக்கிய தரும மாகிய பெரியோரைப் பணிதலை தானும் அனுசரித்து வந்தார் சீதாபிராட்டியார்.



ஸ்ரீராமாவதாரத்தைப் போல ஸ்ரீகிருஷ்ணாவதா ரத்திலும் ஸ்ரீமகாலக்ஷ்மி பிராட்டியாரின் திருவவ தாரம் நிகழ்ந்தது. குண்டினபுரம் என்ற கிராமத்தில் ருக்மி என்பவனின் சகோதரியாக அரசகுலத்தில் அவதரித்த ஸ்ரீமகாலக்ஷ்மி, ருக்மிணி என்ற திருப் பெயருடன் கண்ணைக்கவரும் பேரழகியாக வளர்ந்து வந்தார். தங்கள் நகரத்திற்கு வரும் பலரும் ஸ்ரீகிருஷ்ண பகவானின் திருமேனி அழகினையும், பராக்கிரமங்களையும் கூறுவதைக் கேட்டுக் கேட்டு அவர்மீது பேரன்பு கொண்ட ருக்மிணி பிராட்டியார் அவரையே மணந்து கொள்ள விரும்பினார்.

ஆனால் அவருடைய சகோதரன் ருக்மியோ ஸ்ரீகிருஷ்ணரை தன்னுடைய ஜென்ம விரோதியாக நினைக்கும் சிசுபாலனுக்கு ருக்மிணியை மணமுடிக்க நிச்சயித்தான். ஸ்ரீகிருஷ்ணரையே தன்னுடைய கணவராக வரித்திருந்த பிராட்டியார் அந்தணர் ஒருவரை தம்முடைய தூதுவராக துவாரகைக்கு அனுப்பிவைத்தார்.

அந்தணர் மூலம் ருக்மிணி பிராட்டியாரின் காதலை அறிந்து கொண்ட ஸ்ரீகிருஷ்ணபகவானும் குண்டினபுரத்திற்கு வந்து பார்வதிதேவி திருக்கோயிலில் வழிபட்டு வெளியே வந்து பிராட்டியை தம்முடைய தேரில் ஏற்றிக் கொண்டு துவாரகையை நோக்கி விரைந்தார். தம்மை தாக்க வந்த ருக்மிணியின் அண்ணன் ருக்மியை கொல்லாமல் விட்டுவிட்டார். பின்னர் துவாரகை நகரை அடைந்து பிராட்டியாரை சாஸ்திர முறைப்படி திருமணம் புரிந்துக் கொண்டு இன்பமாக இல்லறம் நடத்தினார்.

சத்யபாமா, ஜாம்பவதி உள்ளிட்ட ஏழு கன்னி யரை ஸ்ரீகிருஷ்ணபகவான் மணந்துக் கொண்டாலும் ஸ்ரீருக்மிணிப்பிராட்டியார் அவர்களை வேற்றுமை பாராட்டாமல் கனிவுடன் நடந்துக் கொண்டார். மேலும் ஸ்ரீகிருஷ்ணரின் பால்யகால சிநேகிதராகிய

குசேலர் துவாரகைக்கு வந்தபோது ஸ்ரீகிருஷ்ண ருடன் சேர்ந்து அவருக்குப் பாதபூஜை செய்து, களைப்புத் தீர விசிறி, உணவளித்து உபசரித்ததுடன் நில்லாமல், அவருக்கு மாபெரும் செல்வம் கிடைக்கவும் அனுக்கிரஹம் புரிந்தார்.

குசேலர் கொண்டு வந்த அவலை ஸ்ரீகிருஷ்ண பகவான் ஆசையாக உண்டவுடன், குசேலர் வசிக்கும் சிற்றூர் இருக்கும் திசையைப் பார்த்து ஸ்ரீருக்மிணி பிராட்டியார் ஒரேயொருமுறை தம் திருக்கண்களால் அருட்பார்வை பார்த்தாள். துவாரகையிலிருந்து குசேலரின் சிற்றூருக்குச் செல்லும் வழியில் அமைந் துள்ள அத்தனை ஊர்களும் செல்வச் செழிப்பைப் பெற்றதாக பெரியவர்கள் கூறுவார்கள்.

**ஸ்ரீராமாவதாரத்தில்...**

ஸ்ரீசீதாபிராட்டியாரின் சரித்திரம் விரிவாகவும், ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் ருக்மிணிபிராட்டியாரின் சரித்திரம் சற்றே சுருக்கமாகவும் அமைந்துள்ள போதும், இரண்டு அவதாரங்கள் மூலமாகவும் ஸ்ரீவைணவ தத்துவம் விளக்கப்படுகிறது என்பது பெரியோர்களின் கருத்தாகும்.

ஸ்ரீமத்ராமாயணத்தில் சீதாபிராட்டி என்னும் ஜீவாத்மா ஸ்ரீராமபிரான் என்னும் பரமாத்மாவை அடைந்திட ஆஞ்சனேயர் ஓர் ஆசாரியார் ஸ்தானத் தில் நின்று உதவினார். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலோ, ருக்மிணி பிராட்டியார் என்னும் ஜீவாத்மா, ஸ்ரீகிருஷ்ணர் என்ற பரமாத்மாவை அடைவதற்கு அவரிடம் தூதாகச் சென்ற ஓர் அந்தணர் ஆசாரி யாரைப் போன்று வழிகாட்டி உதவினார்.

ஆக இந்த சம்ஸார சாகரத்தில் அகப்பட்டுக் கொண்டு அலைகழியும் ஜீவாத்மாக்களை ஸ்ரீராமாநு ஜரின் வழித்தோன்றல்களாகிய தத்தம் ஆசாரிய சிரேஷ்டர்கள் துணைகொண்டு இப்பிறவியிலிருந்து விடுபட்டு வைகுண்ட லோகத்தில் அருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை அடைந்து தொண்டு செய்து எல்லையில்லா பேரின் பம் அடைந்துய்யலாம் என்பதே சீதாபிராட்டியார், ருக்மிணிப் பிராட்டியார் ஆகிய இருவரின் அவதார சரித்திரத்தின் சாராம்சமாகும்.

இவ்வுலகில் செல்வச் செழிப்பை அளிப்பதுடன் பரலோகமாகிய வைகுண்டத்தின் பேரின்பத்தை அடையவும் தன்னுடைய திருவவதாரங்களின் மூலம் வழிகாட்டியருளிய ஸ்ரீமகாலக்ஷ்மியே ஸ்ரீபத்மாவதி தாயாராக இக்கலியுகத்தில் பேரருள் புரிந்து வருகிறார்.

## ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு லக்ஷ குங்குமார்ச்சனை திருவிழா



**தாயாருக்கு குங்குமார்ச்சனை என்பது சிறப்பான ஒரு சேவையாகும். எத்தனை அர்ச்சனைகள் நடைபெற்றாலும் குங்குமார்ச்சனைக்கு ஓர் சிறப்பான இடம் உண்டு.**

**தினசரி சேவையில் குங்குமார்ச்சனை சேவை மிக அரிதான சேவையாக நடைபெறுகிறது. ஸ்ரீபத்மாவதி தாயருக்கு நடைபெறும் வருடாந்திர சேவைகளில் "லக்ஷ குங்குமார்ச்சனை" சேவை ஒன்றாகும். தாயார் பிரம்மோத்ஸவத்தின் முன்னர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு "லக்ஷ குங்குமார்ச்சனை" நடைபெறும். அன்று தாயாரை சிறப்பாக அலங்காரம் செய்து, நன்கு அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் எழுந்தருளச் செய்து லக்ஷ நாமங்களால் தாயாரை போற்றி குங்குமத்தால் அர்ச்சனை நடைபெறும். இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றால் சௌபாக்கியம் பெறலாம் என்பது ஐதீகம்.**

இதிகாசங்கள் தவிர ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் தொடங்கி நமது பதினெண் புராணங்களிலும் மகாலக்ஷ்மி பற்றி காண முடிகிறது. விஷ்ணு புராணம் இவளது தோற்றம் மற்றும் திருமணத்தின் பெருமையை மிகச்சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. அதுவும் முதலாவது அங்கத்திலேயே விரித்துரைக் கப்படுகிறது.

இப்புராணம் பராசர மகரிஷிக்கும் மைத்ரேயருக்கும் நடந்த உரையாடலாக சொல்லப்படுகிறது. புராணத்தின் தொடக்கத் திலேயே பராசரர் சொல்கிறார்.

*"நித்யைவைஷாஜகன்மாதா விஷ்ணோ: ஸ்ரீரனபாயிநீ*
*யதா ஸர்வதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம"*

(ப்ராதமணோத்தமரே! மகாவிஷ்ணு உலகத்திற்கு தந்தையாய் எங்கும் இருப்பது போல அவனை விட்டு ஒருபோதும் பிரியாத லக்ஷ்மி உலகத்திற்கு தாயாய் விளங்கு கிறாள்). முதலில் நாம் மகாலக்ஷ்மி பற்றி அறிவது, அவள் பிருகு மகரிஷிக்கு மகளாய் பிறந்தாள். அதனால் பார்கவி என்று அழைக்கப்பட்டாள் என்று தெரிந்துக் கொண்டிருக்கிறோம். அவள் அப்படி சமுத்திரத்தைக் கடையும் போது அலைகளிலிருந்து எழுந்தாள் என்று மைத்ரேயர் கேட்டதும் பராசரர் சொல்கிறார்:

ஒருமுறை பகவத் பக்தியில் ஆழ்ந்துபோன துர்வாச மஹரிஷி உலகெங்கும் திரியும் போது , வழியில் ஒரு அழகிய வித்யாதர ஸ்த்ரீயைக் கண்டார். அந்த பேரழகி கையில் மணம் வீசும் சிறந்த கற்பக மலர்களால் கட்டிய மாலையை வைத்திருந்தாள். அவள் மஹாலக்ஷ்மியை பூஜை செய்து மாலையைப் பெற்றிருந்தாள். ரிஷி அந்த ஸ்த்ரீயிடம் இந்த மாலையை எனக்குத் தரவேணும் என்று கேட்டார். அவளும் மகிழ்ந்து அம்மாலையை பக்தியுடன் ரிஷிக்கு சமர்ப்பித்து அவரது ஆசிகளைப் பெற்று தன் வழியே சென்றுவிட்டாள்.

அந்த தெய்வீக மாலையை தலையில் வைத்து பல இடங்களில் சஞ்சரித்த முனிவர் தேவலோகத்திற்கு வந்து சேர்ந்தார். அவர் எதிரே தேவலோகத்தினை ஆளும் இந்திரன் அவனது ஐராவதம் என்னும் யானையின் மீதேறி பவனி வந்துக் கொண்டிருந்தான். இந்தமாலை இப்பேரரசினிடம் இருந்தால் இந்திரனது செல்வமும் செல்வாக்கும் பெருகும் என்று நினைத்து, இந்திரனை நோக்கி மாலையை வீசினார்.

தனது பெருமையில் மூழ்கியிருந்த இந்திரன், இது ஏதோ பைத்தியம் என்று நினைத்து விட்டான். கேடு வரும் பின்னே, மதிகெட்டு வரும் முன்னே என்று சும்மாவா சொல்கிறார்கள்? மாலையை வணக்கத்துடன் வாங்கி தன் தலையில் சூட்டிக்கொள்ளாமல், யானையின் மஸ்தகத்தில் வைத்தான். யானையும் தலையில் இருக்கும் அந்த மாலையை தன் துதிக்கையால் எடுத்து தரையில் போட்டது. இது கண்டு துர்வாஸர் கொதிப்படைந்தார். துர்வாஸரின் கோபம் ஜகத் பிரசித்தமாயிற்றே.



# புராண இலக்கியங்களில் ஸ்ரீமகாலக்ஷ்மி

**– திருமதி பிரேமா நந்தகுமார், ஸ்ரீரங்கம்,**
**04312432959**

மூவுலகங்களுக்கும் அரசன், தேவர்களுக்கு எல்லாம் தலைவன் தேவேந்திரன் என்ற கர்வந்தானே உன் செயலுக்குக் காரணம்? இப்படி அகந்தையுடன் நீ பரிபாலிக்கும் இவ்வுலகங்கள் மூன்றும் இனி லக்ஷ்மி கடாக்ஷமின்றிப் போகட்டும் என்று சபித்துவிட்டார்.

இந்திரன் மாபெரும் தவறு செய்ததை உணர்ந்தான். முனிவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். துர்வாஸர் அவன் சொல்வதைக் கேட்காமல், கோபத்துடன் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டார். இந்திரன் ஆளும் தேவருலகங்களில் லக்ஷ்மி கடாக்ஷம் மறைந்து பசி பிணி ஏழ்மை முதலிய துன்பங்கள் வந்ததால், தேவர்கள் சக்தி இழந்தனர். அசுரர்கள் தேவர்களுக்கு எதிராக போரிட்டு தேவருலகை வென்றெடுத்தனர். இப்படியாக எப்பொழுது சண்டை நடந்தாலும் வெற்றி அரக்கர்களுக்கே என்று நிச்சயமானது.

அவர்கள் கர்வத்துடன் எங்கும் திரிந்து மக்களுக்கு பலவிதங்களில் தொந்தரவு தந்தனர். தேவர்களும் பொறுமையை முற்றும் இழந்து மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். நாராயணனும் உதவுவதாகக் கூறி, இதற்கு முதல் கட்டமாக தேவர்கள் அசுரர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுமாறு கூறினான். தேவசக்தியும் அசுரசக்தியும் இணைந்ததால் பாற்கடலைக் கடைந்து சாகாவரம் தரும் அமுதமே பெற்றுவிடலாம் என்று யோசனை கூறிட, அதன் படி தேவாசுரர்களும் மந்த்ர மலையை பாற்கடலில் நிறுத்தி வாசுகி என்னும் மகாப்பெரிய சர்ப்பத்தை அதற்குச் சுற்றி, பாற்கடலைக் கடைந்தனர்.

நடுவில் மந்த்ரமலை தடுமாற, நாராயணனே கூர்ம (ஆமை) வடிவில் மலையை முதுகில் வைத்துக் கொண்டார். பாற்கடலை நன்றாக கடைந்து வரும் போது காமதேனு, பாரிஜாதமரம், சந்திரன் முதலியன உண்டான பின் ஆலகாலவிஷம் பாற்கடலிலிருந்து வெளிவந்தது. அதன் விஷமயமான நெருப்பிலிருந்து மூவுலகையும் காப்பாற்றிட, பரமசிவன் அதை விழுங்கிவிட்டார். இப்படி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை கடையும் போது, கருணையே உருப் பெற்றது போல், மஹாலக்ஷ்மி, கையில் தாமரை மலரை ஏந்தி. அழகிய தாமரை மலரில் அமர்ந்தவாறு தோன்றினாள்.

உடனே கல்யாண கோலாகலமானது. லக்ஷ்மி கடாக்ஷத்தை இழந்திருந்த இந்திரன் உடனே ஒரு சிறந்த ஆசனத்தை சமர்ப்பித்து தேவியை வணங்கினான். கங்கையின் தலைமையில் புண்ணிய நதிகள் தேவிக்கு நீராட்டி அலங்கரித்தனர். சமுத்திர ராஜனும் தன் மகளாகப் பிறந்த மஹாலக்ஷ்மிக்கு சிறந்த மாலை, ஆபரணங்கள் கொண்டு வந்தான். தேவியும் அங்கு சூழ்ந்திருந்த கூட்டத்தைப் பார்த்தாள்.

அனைத்து தேவர்களையும் பார்த்தாள். ஸ்ரீஹரியின் மார்பகத்தைக் கண்டு, அணுகி, அவருக்கு மாலை



இட்டாள் என்று விஷ்ணுபுராணம் கூறுகிறது. மஹாலக்ஷ்மியின் பெருமையை கூறுவதற்கு புராணங்களில் போட்டியே இருக்கும் போலும்!




அஷ்டலக்ஷ்மி என்று பல கோணங்களில் பிராட்டி நமக்கு உதவுகிறாள். ஒரு மனிதனுக்கு வேண்டிய அனைத்து சக்திகளும் மகாலக்ஷ்மியிடம் உள்ளன என்பது நம்மவர் நம்பிக்கை. கருடபுராணம் உலகின் தலைவன் ஸ்ரீமகாவிஷ்ணு என்னும் புருஷனுக்கு இணைந்த பிரகிருதியாக உள்ளாள் என்று போற்றுகிறது. பிரம்ம வைவர்த்த புராணம் லக்ஷ்மி துளசி வடிவில் நமக்கு அருள்பாலிக்கிறாள் என்றும், பத்ம புராணம் மகாலக்ஷ்மி விரதமகிமையால் சியாமபாலா என்னும் ராஜகுமாரி தன் பெற்றோர் நல்வாழ்வு பெற வழி செய்ததை அறிகிறோம். புராணங்கள் தோன்றுவதற்கு வெகு முன்பே, ரிக்வேதம் மகாவிஷ்ணுவின் தேவியின் பெருமையை ஸ்ரீசூக்தத்தில் எடுத்துக் கூறியுள்ளது.



*''ஹிரண்யவர்ணாம் ஹரணீம் ஸுவர்ண, ரஜதஸ்ர,ஜாம்*
*சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோ ம ஆவஹ''*



வேத ரிஷிகளின் கவிதையை சுப்ரமணிய பாரதியார் மந்திரச்சொல் என்கிறார். வேத ரிஷிகளின் மந்திரச் சொல்லாக விளங்கும் இத்துதியின் தொடக்கமே மகாலக்ஷ்மியை நம்முன் தோற்றுவித்து விடுகிறது.



பிராட்டியின் மேனி பொன்னாக ஒளிர்கிறது; தங்கம் வெள்ளி யால் செய்த மாலைகளை அணிந்திருக்கிறாள், பூரணசந்திரன் போல குளுமையாக பிரகாசிக்கிறாள். செல்வமே உருவானவள் மகா லக்ஷ்மி; அக்னி தேவா, அனைத்து செல்வங்களையும் அருளும் இந்த பிராட்டியை எமக்காக தோன்றிடச் செய்வாய்.





ஸ்ரீசூக்தம் என்னும் இத்துதிக்குப்பிறகு வரும் வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், துதிகள், பாடல்கள் அனைத்தையும் ஒளிரச்செய்யும் மகாலக்ஷ்மிக்கு பூஜை, விரதம் முதலியன நமக்கு கணக்கற்ற நன்மைகள் தருவதை காண்கிறோம். விஷ்ணுவை அகல கில்லேன் இறையும் என்று திருமாலுடன் எப்பொழுதும் இணைந்திருக்கும் பிராட்டியின் பெருமையை பத்ம புராணம் எடுத்துச் சொல்கிறது. படிக்கப் படிக்கத் தெவிட்டாத இவ்வரிகள் பத்மபுராணம் நிறைவுறும் இடத்தில் வருகின்றன.



பார்வதி தேவி சிவபெருமானிடம் கேட்டாள்; தாங்கள் கூறிய மந்திரத்தின்படி லக்ஷ்மியும் விஷ்ணு போல் என்றும் இருப்பவள் என்று தெரிகிறது. அவர்களது சொரூபங்கள் யாவை? அவர்கள் வசிக்குமிடம் எப்படி இருக்கும்? அவர்களது உருவங்கள் குணங்கள் எப்படிபட்டவை? என்பதெல்லாம் தாங்கள் கூறிக் கேட்க ஆசைப்படுகிறேன்.





சிவபெருமான் கூறினார்: நீ கேட்டதைச் சொல்கிறேன். பெருமானின் திருக்கைகள், கண்கள் யாவும் உலகெங்கும் படர்ந்துள்ளன. இந்த உலகம், இங்குள்ள உயிர்கள், சிறந்த பவனங்கள் அனைத்திலும் அவர் உள்ளார். அவரே லக்ஷ்மி தேவியின் மணாளர். இவர்களது இருப்பிடமே பரமபதம் எனப்படுவது. செல்வத்திற்கு இது

ஊற்றுக்கண். உலகமே அவர்களது செயல்பாட்டிற்கு அரங்கம். இவ்வுலகில் வேதங்கள் முதல் அதிலிருக்கும் பொருட்கள் யாவுமே லக்ஷ்மியின் உருவங்கள் தான்.

இங்கு நாம் பெறும் பொருட்கள் யாவும் லக்ஷ்மி தேவியின் சொரூபங்கள். அழகு, நன்னடத்தை, பெரியவர்கள் கூறிய நல்வழியில் செல்லுதல், சௌபாக்கியம் முதலியன குடிகொண்ட பெண்கள் லக்ஷ்மியின் உருவம் என்று நினைப்பது வழக்கம். பார்வதி! லக்ஷ்மி நல்ல பெண்களுக்கு சிரோமணியாக விளங்குவதால் அவளது கருணை பொங்கும் பார்வை படிந்தவுடன் பிரம்மா, இந்திரன், சூரியன், யமன், அக்னி முதலானவர்கள் சம்பத்தைப் பெறுகிறார்கள்.

பாரதத்தின் அழியா சம்பத்தான சனாதன தர்மம் வளர்த்த எண்ணற்ற செல்வங்களுக்கு, செல்வத்திற்கே தலைவியாக ஒளிரும் லக்ஷ்மிதேவி தலைமை ஏற்றிருக்கிறாள். அதனால்தான் வரலக்ஷ்மி விரதம் முதலியவை கடைபிடித்து மகிழ்கிறோம். அவளது அருளைப் பெறுகிறோம். நமது காலத்திலேயே எத்தனை துதிகள்? அனைத்தும் அன்னையின் அருளை வேண்டுகின்றன அல்லவா!

*ஆயிரமிதழ் தாமரையில் உதித்தவளே*
*ஆகாசராஜனின் ஆசை மகளானவளே*
*அலர் மேல் மங்கையாய் அருள்பவளே*
*அழியா முக்தியை தந்தருள்வாயம்மா!*

*திரேதா யுகத்திலே வேதவதியானவளே*
*தசரத ராமனை நெஞ்சிலிருத்தியவளே*
*தாரகராமன் தாரமாக தவமிருந்தவளே*
*துயர் தீர்த்தெமை காத்தருள்வாயம்மா!*

*பூமாதேவியின் பூரண அம்சமானவளே*
*பூலோக சீனிவாசன் துணையானவளே*
*புனித பிரம்மோத்ஸவத்தின் திருமகளே*
*பிறவா வரமளிப்பாய் பத்மாவதியம்மா!*

*திருப்பதியிலே அருவுருவாய் நிற்பவளே*
*திருச்சானூரில் தாயாராய் அருள்பவளே*
*திருமார்பன் தினந்தேடும் அலைமகளே*
*துலங்கும் வாழ்வை தந்தருள்வாயம்மா!*

*தூய மங்களாசாசனத்தின் மெய்யவளே*
*தங்கத்தேர் திருவிழாவின் தேவியவளே*
*திவ்ய பிரபந்தங்களிலுறை மலர்மகளே*
*தேடி வருவோரை ஆட்கொள்வாயம்மா!*

*கார்த்திகை பஞ்சமியின் நாயகியவளே*
*குங்கும அர்ச்சனையின் கருவானவளே*
*கல்யாண உற்சவத்தின் முதலானவளே*
*கலியுகத்து கவலைகள் தீர்ப்பாயம்மா!*

*வந்தனையே ஏற்று வாழ்வளிப்பவளே*
*வேள்விகளில் உய்த்து வரமளிப்பவளே*
*வணங்கும் அடியார்க்கு கதியானவளே*
*வாழ்வில் ஒளியேற்றி ரட்சிப்பாயம்மா!*



# ஆயிரமிதழ் தாமரையில் உதித்தவளே


**திரு. சுவாமிநாதன், கோவை.**



# பாவை நோன்பு

சித்திரக் கதை

கதை மூலம்: திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு
சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்




கோவிந்தா! உன் கருணையினால்
பாவங்களைப் போக்கிடு.
புரிந்துள்ளாய் அல்லவா!
எங்கள்
பலருக்கு அருள்
17
18
கோவிந்தா! மாதவா!
19
நரசிம்மா! எங்களை
காத்திட சிங்கம் போல்
நடந்து வா! உன்னையே
சரணடைந்தோம்.
துஷ்டர்களை அழித்த உன்
வீரத்தினை புகழ்ந்து
பாடுவது எங்கள்
அதிர்ஷ்டம்.
20
ஸ்வாமி! எங்கள் கோரிக்கையே உன்னை
தரிசித்து கைங்கரியம் செய்வதேயாகும். கூடி
இருந்து உன் பிரசாதத்தையே உண்கிறோம்.
21
ஸ்வாமி! நாங்கள் எப்பொழுதும் உன்
உடனிருந்து உன் சேவைகளை செய்தல்
வேண்டும்.
22
கிருண்ணா! எந்நேரமும் உன்
நினைவாகவே இருப்பவள்
நான். என்னுள் நீ நீக்கமற
நிறைந்துள்ளாய் அல்லவா!
23
விரதம்
முழுமையடைந்தது.
ஆண்டாள் எண்ணம்
ஈடேறியது. அவள்
அரங்கனுள்
ஐக்கியமானாள்.
24
அடுத்த
இதழில்
இன்னும் ஒரு
கதையை
பார்த்து, படித்து
மகிழலாம்.
முற்றும்.

## பல்சுவை பகுதி

1. பத்மாவதி தாயாரை காண குறத்தியாக வந்தவர் யார்?
   அ) வகுளாதேவி ஆ) ஸ்ரீநிவாசன் இ) ஸ்ரீதேவி
2. தாயாருக்கும் தீர்த்தத்திற்கும் பெருமை வாய்ந்த ஊர் எது?
   அ) திருச்சானூர் ஆ) திருப்பதி இ) மங்காபுரம்
3. அஷ்ட லக்ஷ்மி கோயில் அமைந்துள்ள இடம் எது?
   அ) அடையார் ஆ) கோடூர் இ) பெசண்ட் நகர்
4. ஸ்ரீஸ்துதியில் சுலோகங்களின் எண்ணிக்கை எத்தனை?
   அ) 25 ஆ) 26 இ) 27
5. புள்ளின் வாய் கீண்டானை எனப் பாடியவர் யார்?
   அ) நம்மாழ்வார் ஆ) பெரியாழ்வார் இ) ஆண்டாள்

**விடைகள்**
1) ஆ, 2) அ, 3) இ, 4) அ, 5) இ

### பொருத்துக...

1. மகாலக்ஷ்மி - அ. அலர்மேல் மங்கை
2. பத்மாவதி - ஆ. பஞ்சமி
3. உத்திராடம் - இ. பிருகுரிஷி
4. சுகமுனி - ஈ. பத்மாவதி
5. கார்த்திகை - உ. திருச்சானூர்

1.இ, 2.அ, 3.ஈ, 4.உ, 5.ஆ.



### தெரிந்து கொள்ளலாமே...

"தண்ணடியார் திறத்தகத்துத் தாமரை
யானாகிலும் சிதகுரைக்கு மேல்
என்னடியாரது செய்யார் செய்தாரேல்
நன்று செய்தார் என்பர் போலும்"
-பெரியாழ்வார்

ஆன்மாக்களின் பாவங்களை ஏற்க மறுக்கும் இறைவனுக்கு அவர்களை ஏற்கச் செய்யும் நிலையில் உள்ளவள் பிராட்டி

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...


அருள் அனைத்தும் செல்வங்கள் பெற்று பெறுவோம் மகாலக்ஷ்மியின்.

மகாலக்ஷ்மியின் அருள் பெற்று செல்வங்கள் அனைத்தும் பெறுவோம்.

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### விடுகதை பகுதி...

1. அடித்தாலும் உதைத்தாலும் அழ மாட்டான்?
2. தண்ணீரில் நீந்தி, தரையில் தாவுவான்அவன் யார்?
3. உதை வாங்கிக் கொண்டு ஊரெல்லாம் செய்தி சொல்வான்?

1. பந்து, 2. தவளை
3. தண்டோரா


Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 501. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



11-11-2021 அன்று திருமலையப்ப
ஸ்வாமிக்கு நடைபெற்ற புஷ்பயாகம்



04-11-2021 அன்று திருமலை ஆலயத்தில்
நடைபெற்ற தீபாவளி ஆஸ்தானம்



20-10-2021 அன்று கபிலேஸ்வர ஸ்வாமிக்கு
நடைபெற்ற அன்னாபிஷேகம்



31-10-2021 முதல் 02-11-2021 வரை ஸ்ரீநிவாசமங்காபுரத்தில் ஸ்ரீகல்யாண
வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு நடைபெற்ற பவித்ரோத்ஸவ திருக்காட்சி





13-11-2021 அன்று திருவேங்கடமுடையானை தரிசித்த மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அவர்கள்,
மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு.ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்களுடன் தி.தி.தே. உயர்அதிகாரிகள்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by
Tirumala Tirupati Devasthanams Printing on 25-11-2021 & posting at
Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India
under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023
"LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(5)/2021-2023"
Posting on 20th of Every month.



மாலே! மணி வண்ணா!
மார்கழி நீராடுவான்...

- திருப்பாவை